REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 14 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :135 பங்குனி 27ஆம் நாள் வியாழக்கிழமை 09 ஏப்ரல் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

# கொரோனா ஒழிப்புக்காக வடக்குக்கு ரூ.80 மில்.

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

வடக்கு மாகாண சுகாதார சேவைகளுக்கு 80 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகையால் மருத்துவ சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்களுக்குத் தேவையானவற்றை மருத்துவமனைகளில் பெற்றுக் கொள்ள முடியும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்க வடக்கு மாகாண இணைப்பாளர் மருத்துவர் காண்டீ பன் தெரிவித்துள்ளார். 02

## நேற்றும் நால்வருக்கு கொரோனா தொற்று

### தொற்றுக்குள்ளானோர் தொகை 189 ஆனது

கொழும்பு, ஏப்.9

இலங்கையில் கொரோனா வைரஸின் பாதிப்பு நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகின்றது. கொரோனா தொற்று அறிகுறியுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களுக்கு அடுத்தடுத்து நோய்த்தொற்று உறுதி செய்யப்படுவதால் கடந்த சில நாள்களாகப் பாதிக்கப்பட்டவர்களின் 02

## ஊரடங்கால் பயனில்லை

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் பாஸ் நடைமுறையை சாடுகிறது

யாழ்ப்பாணம், ஏப். 9

யாழ்ப்பாண மாவட்டத்தில் 3 ஆயிரம் பேருக்கு மாவட்டத்திலிருந்து வெளிச் செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்படியானதொரு நிலையில் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருப்பது அர்த்தமற்றதாகும். இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. அந்தச் சங்கத்தின் வடமா 02

## கொரோனா காவு இலங்கையில் 7

கொழும்பு, ஏப்.9

உலகம் முழுவதும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வரும் கொரோனா வைரஸ் தாக்கத்தால் இலங்கையில் 7 ஆவது நபர் உயிரிழந்துள்ளார். கொரோனா வைரஸால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு கொழும்பு அங்கொடை தேசிய தொற்று நோயியல் 11

முச்சந்தி முரளி



" எரியிற வீட்டில பிடுங்கினது வரை லாபமெண்டு நினைச்சு தான் எலெக்சனை வைச்சே தீரோணும் எண்டு நிக்கினம் போல"

## 14 நாள் தனிமையிலிருந்து சென்றவருக்கும் கொரோனா

### அம்பாறையில் நேற்று இனங்காணப்பட்டார்

கொழும்பு, ஏப்.9

அம்பாறை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுடன் ஒருவர் முதன்முறையாக நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளார். அக்கரைப்பற்றுப் பிரதேசத்தைச் சேர்ந்த இவர், அண்மையில் கட்டார் சென்று வந்துள்ளார். இவருக்குக் கொரோனா தொற்றியிருப்பது மருத்துவ பரிசோதனைகளில் நேற்று தெரியவந் 11

## பாஸுக்குப் புதிய நடைமுறை வர்த்தகர்கள் பெரும் சிரமம்

### கொழும்புக்குச் செல்லும் லொறிகள் எண்ணிக்கை குறைகிறது

யாழ்ப்பாணம், ஏப். 9

ஊரடங்கு நேரத்தில் மாவட்டத்திலிருந்து வெளியில் செல்வதற்கு பாஸ் பெற்றுக் கொள்வதற்கு அரசு அறிவித்துள்ள புதிய நடைமுறையால் யாழ்ப்பாண மாவட்ட வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தினசரி 30 லொறிகள் கொழும்புக்குச் சென்று வந்த நிலையில் புதிய நடைமுறையின் பின்னர் 10 லொறிகளே கொழும்புக்குச் சென்றுள்ளதாக வர்த்தக சங்க வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. 02

## உயர் நீதிமன்ற ஆலோசனை தேர்தலுக்குத் தேவையில்லை

### ஜனாதிபதியின் செயலாளர் ஆணைக்குழுவுக்குப் பதில்

யாழ்ப்பாணம், ஏப்.9

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெறுவது தேவையற்றது. அதனால் தேர்தல் நடவடிக்கைகளுக்குத் தயாராக வேண்டும் என்று ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜெயசுந்தர தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். நாட்டில் ஏற்பட்ட கொறொனா தொற்று நிலைமையால் பிற்போடப்பட்டுள்ள பொதுத் தேர்தலை நடத்து 11

## பிரான்ஸில் தமிழ் பெண் கொரோனாவால் சாவு

யாழ்ப்பாணம், ஏப்.9

கொரோனா தொற்றுக் காரணமாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் பிரான்ஸில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், பிறவுன் வீதியைச் சேர்ந்த உ.சாம்பவி 02

## விசேட அதிரடி படைக்கே கஞ்சா விற்ற கில்லாடி!

யாழ்ப்பாணம், ஏப்.9

ஊரடங்குச் சட்டம் யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைமுறையில் உள்ள நிலையிலும் பருத்தித்துறைப் பகுதியில் நேற்றையதினம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். பருத்தித்துறைப் பகுதியில் கஞ்சா வியாபாரம் அமோகமாக நடை 11

## உணவுப் பொருள் விலை விவரங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 9

கொழும்பு விலையை அனுசரித்து மொத்த வர்த்தகர்களால் யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்படும் பொருள்களின் விலைகளை யாழ்ப்பாணம் வர்த்தக சங்கம் நேற்று மாலை வெளியிட்டுள்ளது. 02

## மஸ்தானுக்கு கொரோனாவா?

வவுனியா, ஏப். 9

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் கொரோனாத் தொற்று அச்சம் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என்று அறியமு 11

## இளைஞனின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 9

யாழ்ப்பாணம் திருநெல்வேலிச் சந்தியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் வேலைசெய்து வந்த முல்லைத்தீவு இளைஞன், தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். 11

## மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

வவுனியா, ஏப்.9

வவுனியா, இலுப்பைக்கடவையில் ஒருவர் மின்னல் தாக்கி நேற்று உயிரிழந்துள்ளார். அதே இடத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான எஸ். மங்களேஸ்வரன் (வயது 25) என்பவரே உயிரிழந் 02




செய்திகள் மற்றும் விளம்பரங்களை உதயனில் பிரசுரிக்க...

செய்தி
077 316 5555
076 584 2222
021 493 0000

விளம்பரம்
071 618 2182
077 959 2628
021 493 1111

## கொரோனா...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்

கொரோனா தொற்று ஏற்பட்டுள்ள நிலையில், மருத்துவர்கள் உட்பட சுகாதார சேவையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் பாதுகாப்பு அங்கிகள், மாஸ்க், தொற்று நீக்கித் திரவங்கள் அனைத்தையும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் வழங்கி வருகின்றனர். இதற்குரிய நிதியும் சுகாதாரப் பணிப்பாளரால் வழங்கப்பட்டுள்ளன.

குறிப்பாக 80 மில்லியனுக்கும் மேற்பட்ட நிதி இப்போது கைவசம் உள்ளது. இதனைக் கொரோனாத் தொற்று ஒழிப்புக்காக வடக்கு மாகாணம் முழுவதும் பயன்படுத்துமாறு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். ஆகையால், சுகாதார சேவையில் ஈடுபட்டுள்ள அனைவரும் மருத்துவமனைகளில் மேற்குறித்தவற்றைக் கேட்டு பெறலாம்.

**உபகரணங்களை வழங்குங்கள்**

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று பரிசோதனையை தற்போது சுமார் 20பேருக்கே மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது. இந்த பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியது அவசியமானது. ஆகையால் அதற்கான உபகரணங்களை, வசதிகளை அரசு உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பீடாதிபதி ரவிராஜின் துணையுடன் கொரோனாப் பரிசோதனை செய்வதற்கான ஆய்வுகூடம் அமைக்கப்பட்டுள்ளது. வடக்கு மக்கள் விரைந்து பரிசோதனை செய்வதற்கு வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆயினும் ஒரு நாளைக்கு சுமார் 20 பேருக்கே பரிசோதனை செய்யக் கூடிய வசதி வாய்ப்புக்கள் உள்ளன.

**300 குடும்பங்கள் தனிமைப்படுத்தலில்**

வடக்கில் சுவிஸ் போதகருடன் சம்மந்தப்பட்ட 300 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த 313 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் 60 பேருக்குத்தான் அந்தப் பரிசோதனை செய்யப்பட்டு அவர்களில் 6 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆக 7 பேர் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஆயினும் மதகுருமாருடன் தொடர்புடையவர்களும் ஏனைய தொடர்புடையவர்களுமாக 1700 க்கும் மேற்பட்டவர்கள் சுயதனிமைப்படுத்தலில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இன்றைய நிலவரத்தின்படி ஏற்கனவே தனிமைப்படுத்தி இரு வாரங்களில் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டவர்களையும் மேலும் இரண்டு வாரங்களுக்கு வீடுகளில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அவர்களிடமும் இந்தப் பரிசோதனையைச் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. ஏனெனில் சில வேளைகளில் அறிகுறிகள் இல்லாமலேயே நோய் இருக்கலாம். எனவே சந்தேகிக்கப்படுகின்ற அனைவருக்கும் இந்தப் பரிசோதனையைச் செய்வதன் மூலமே வடக்கு மாகாணத்தில் எவ்வளவு தூரம் இந்த நோய் பரவலாகத் தொற்றியுள்ளது என்பதை அறிய முடியும்.

அது செய்யாத பட்சத்தில் யாழ்ப்பாணத்தில் 7 நோயாளிகள் தான் என்று அசண்டையீனமாக எமது மக்கள் இருந்துவிடுவர். ஊரடங்கு நீக்கினால் ஒன்றுகூடும் சந்தர்ப்பம் உள்ளது.

**தொற்று இன்னும் பரவ வாய்ப்பு**

கொரோனா வைரஸ் தொற்று இந்த மாதத்திற்கும் மேலும் பரவக் கூடிய அபாயம் உள்ளது. இதைக் கட்டுப்படுத்துவதற்கான போதிய வசதிகள் இல்லாததால் அனைத்து தரப்பினர்களும் இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வீடுகளிலேயே சுயதனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும்.

ஒரு நோயாளி இணங்காணப்படுகின்ற போது அந்த நோயாளி சென்றிருக்கக் கூடிய இடங்கள் தனிமைப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. ஆகவே ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் மக்கள் முக்கியமாக அவதானமாகச் செயற்பட வேண்டும். தேவையில்லாமல் வீதிகளில் நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

**அவசிய தேவைக்கு மட்டுமே பாஸ்**

பாஸ் அனுமதியை உண்மையாகவே அத்தியாவசிய தேவைக்காக மட்டும் பயன்படுத்த வேண்டும். வேறு தேவைக்கும் பயன்படுத்துவதால் நோயைப் பரப்புகின்ற காவிகளாக செயற்படும் சந்தர்ப்பமும் உள்ளது.

கொரோனாத் தொற்று நூறு பேரில் 70 பேருக்குத் தான் நோய் அடையாளம் அறிகுறி தெரியும். மிகுதி 30 பேருக்கு எதிர்மறையாக வரும். அதனால் அவர்கள் சூழலில் நடமாடத் தொடங்குவார்கள். ஆகையால் அந்த 30 வீதமானவர்கள் நோயைப் பரப்பலாம். அது மட்டுமன்றி 20 வீதமான ஆள்கள் அறிகுறிகளைக் காட்ட மாட்டார்கள்.

**கட்டுப்பாட்டை கைவிடாதீர்கள்**

எவ்வளவு தூரம் தனிமைப்படுத்தல் அல்லது வீடுகளில் கட்டுப்பாட்டுடன் இருக்கின்றீர்களோ அவ்வளவு தூரத்திற்கு தொற்று ஏற்படாமல் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு ஆளணி வசதியோ கட்டமைப்பு வசதியோ எதுவும் முழுமையாகக் கிடையாது. ஆகையால் இந்தவருடம் ஏப்ரல் முடிவடைகின்ற போது 2000 க்கும் மேற்பட்டோருக்கு கொரோனா வராமல் பாதுகாப்பதற்கு மக்களின் ஒத்துழைப்புத் தேவை. என்றார். (த-20)

## நேற்றும்...

எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகின்றது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிய நால்வர் நேற்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

அதையடுத்து தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 185 இலிருந்து 189 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, நோயாளிகளில் இருவர் நேற்றுக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதற்கமைய இதுவரை 44 பேர் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

நோயாளர்களில் 7 பேர் உயிரிழந்துள்ள நிலையில் ஏனைய 138 பேரும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-22)

## ஊரடங்கால்..

காண இணைப்பாளர் மருத்துவர் த. காண்டீபன் இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்று ஒவ்வொரு சுகாதார மருத்துவ அதிகாரியும், ஊரடங்கு நேரத்தில் மாவட்ட எல்லையைத் தாண்டி பயணிக்க 300 மேற்பட்டவர்களுக்கு ஒரு நாளில் சான்றிதழ்களை வழங்குகின்றார்கள். அவை அத்தியாவசிய சேவைகளுக்குரித்தான அரச அலுவலர்கள் அல்ல. பெரும்பாலானவர்கள் மக்களுக்கு அத்தியாவசிய பொருள்களை வழங்குவதாக கூறுபவர்கள்.

யாழ்ப்பாணத்தில் மொத்தம் 14 சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகள் உள்ளன.

யாழ்ப்பாண மாவட்ட எல்லையைக் கடப்பதற்கு 3 ஆயிரம் பேருக்கு அனுமதி வழங்கப்படுகின்றது. சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 2ஆயிரம் பேர் தவிர மற்றவர்கள் அனைவரும் இப்போது பிரதேச செயலகத்தின் கடிதம் காரணமாக சுகாதார மருத்துவ அதிகாரிகளால் சான்றிதழை வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இதனைச் சரியான முறையில் ஒழுங்குபடுத்த வேண்டும்.

மாவட்டச் செயலர் மற்றும் மாகாண சுகாதார பணிப்பாளர் இருவரும் இணைந்து இதனை கட்டுப்படுத்த தேவையான ஒழுங்குமுறையை ஏற்படுத்த வேண்டும்.

வடக்கு மாகாண ஆளுநர் இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட தரப்பினரை இறுக்கமான விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு கட்டுப்படுத்தாதவிடத்து ஊரடங்கு உத்தரவு பயனற்றது. கட்டுப்பாடின்றி அனைத்து மக்களையும் (அத்தியாவசிய சேவைகள் நீங்கலாக) மாவட்ட எல்லைகளை தாண்ட அனுமதிப்பது கொரோனா பரவுவதனை கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு இட்டுச் செல்லும், என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ,5)

## மின்னல்...

துள்ளார்.

இவர் நேற்று மாலை அயல் வீட்டின் முற்றத்தில் நின்றபோது அருகில் உள்ள தென்னை மரத்தில் தாக்கிய மின்னல் காரணமாகப் பாதிப்படைந்தார். அவர் அம்புலன்ஸ் மூலம் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும், அதற்கு முன்னரே அவர் உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

தற்போது கடும் வெப்பத்துடனான காலநிலை நிலவி வரும் நிலையில் வவுனியாயில் கடந்த இரு நாள்களாகக் கடும் இடி, மின்னலுடன் மிதமான மழை பெய்து வருகின்றது. (எ-110,18,105)

## பிரான்ஸில்..

(வயது30) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கொரோனா தொற்றுக்குள்ளான இவர் கடந்த 14 நாள்களாகச் சிகிச்சை பெற்று வந்தார் என்றும், எனினும் சிகிச்சை பயனின்றி அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-20)

## பாஸ்க்கு...

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கு இதுவரை சுகாதார மருத்துவ அதிகாரிகளின் அனுமதி தேவையில்லை. அரசு அறிவித்துள்ள புதிய நடைமுறை காரணமாக வெளிமாவட்டங்களுக்குச் செல்பவர்கள் சுகாதார மருத்துவ அதிகாரிகளின் அனுமதியைக் கட்டாயம் பெற்றுக் கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு பொருள்களை ஏற்றிச் செல்லும் லொறிச் சாரதிகள் மற்றும் உதவியாளர்கள் புதிய நடைமுறை காரணமாக சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

தாம் வசிக்கும் பகுதியிலுள்ள சுகாதார மருத்துவ அதிகாரியே அனுமதிக் கடிதத்தை வழங்கவேண்டும். சாரதிகள் மற்றும் உதவியாளர்கள் பலர் நகரப் பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களில் தங்கியிருந்தே வெளிமாவட்டங்களுக்குச் சென்று வருகின்றார்கள். இவர்கள் தமது பகுதிக்குரிய சுகாதார மருத்துவ அதிகாரியிடம் செல்ல வேண்டுமானால், ஊரடங்கு நேரத்தில் மாவட்டத்துக்குள் நடமாடுவதற்கான அனுமதியைப் பெறவேண்டும். அதன் பின்னரே தாம் வசிக்கும் பகுதிக்குச் சென்று சுகாதார மருத்துவ அதிகாரியின் அனுமதியைப் பெறமுடியும்.

இதேவேளை வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் சாரதிகள் மற்றும் உதவியாளர்களாக யாழ்ப்பாணத்தில் பணியாற்றி வருகின்றார்கள். அவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று வருவது சாத்தியமில்லாத விடயமாக உள்ளது. இதன் காரணமாக புதிய நடைமுறையில் பாஸ் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் நாள் ஒன்றுக்கு சுமார் 30 லொறிகள் கொழும்பு சென்று வந்த நிலையில் புதிய நடைமுறை காரணமாக 10 லொறிகளே கொழும்புக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5)

## உணவு....

குத்தரிசி (ஆட்டக்காரி) ரூ. 140 (அரிசி ஆலை விற்பனை விலை), மொத்த வியாபாரிகளின் விற்பனை விலை ரூ. 145

கீரிச் சம்பா ரூ. 125 (கொழும்பு விலை), ரூ.130 (யாழ்ப்பாண மொத்தவர்த்தக விலை)

பச்சையரிசி (தீட்டல்) ரூ. 105 (கொழும்பு விலை), ரூ. 110 (யாழ்ப்பாண மொத்த வர்த்தக விலை)

பச்சையரிசி (ஊர் தீட்டல்) ரூ. 110 (அரிசி ஆலை விற்பனை விலை), மொத்த வியாபாரிகளின் விற்பனை விலை ரூ. 115

கோதுமை மா ரூ. 87

சீனி ரூ. 120 (கொழும்பு விலை), ரூ. 125 (யாழ்ப்பாண மொத்த வர்த்தக விலை)

மஞ்சள் பருப்பு ரூ. 165 (கொழும்பு விலை), ரூ. 170 (யாழ்ப்பாண மொத்த வர்த்தக விலை)

உ. கிழங்கு ரூ. 140 (யாழ்ப்பாண மொத்த வர்த்தக விலை)

பெரிய வெங்காயம் ரூ. 125 (யாழ்ப்பாண மொத்த வர்த்தக விலை)

உள்ளி ரூ. 460 (கொழும்பு விலை), ரூ. 480 (யாழ்ப்பாண மொத்த வர்த்தக விலை)

நூடில்ஸ் 180 ரூபா (யாழ்ப்பாண மொத்த வர்த்தக விலை)

சோயா மீற் 250 ரூபா (யாழ்ப்பாண மொத்த வர்த்தக விலை)

மரக்கறி எண்ணை லீற்றர் 375 ரூபா (யாழ்ப்பாண மொத்த வர்த்தக விலை)

செத்தல் மிளகாய் ரூ. 640 (கொழும்பு விலை), ரூ. 650 (யாழ்ப்பாண மொத்த வர்த்தக விலை)

மல்லி ரூ. 300 (கொழும்பு விலை), ரூ. 310 (யாழ்ப்பாண மொத்த வர்த்தக விலை)

லக்ஸ்பிறே 380 ரூபா,

கடலை ரூ. 290 (கொழும்பு விலை), ரூ. 300 (யாழ்ப்பாண மொத்த வர்த்தக விலை)

பயறு ரூ. 290 (கொழும்பு விலை), ரூ. 300 (யாழ்ப்பாண மொத்த வர்த்தக விலை) (ஒ,5)

# ஆசிரியர்களின் ஒரு நாள் கொடுப்பனவை 'கொவிட் –19' நிதியத்துக்கு வழங்குங்கள்

## கல்வி அமைச்சர் வேண்டுகோள்



*கொழும்பு, ஏப்.9*

*கொரோனா வைரஸ் தொற்றை ஒழிப்பதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு வலுச் சேர்க்கும் வகையில் ஆசிரியர்கள் தங்களின் ஒரு நாள் கொடுப்பனவை கொவிட் 19 சுகாதார மற்றும் பாதுகாப்பு நிதியத்துக்கு அர்ப்பணிக்க வேண்டும் என கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும கேட்டுக்கொண்டுள்ளார்.*

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பூகோள மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தவும், பொதுமக்களைப் பாதுகாக்கவும் அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்து முன்னெடுத்த செயற்றிட்டங்களை உலக நாடுகள் வரவேற்றுள்ளன. கொரோனா வைரஸ் நாட்டுக்குள் பரவலடைந்ததைத் தொடர்ந்து அனைத்துப் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டன. இந்தத் தீர்மானத்தை உலக சுகாதார ஸ்தாபனம் ஒரு எடுத்துக்காட்டாக ஏற்றுக் கொண்டது. கொரோனா வைரஸ் ஒழிப்புக்கு எதிராக அமைக்கப்பட்ட கொவிட் 19 சுகாதார மற்றும் பாதுகாப்பு நிதியத்துக்கு பல்வேறு தரப்பினர் இயலுமான நிதியுதவிகளை வழங்கியுள்ளார்கள். அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அனைவரதும் பொறுப்பு.

இம்மாத முழுச் சம்பளத்தையும் நான் அந்த நிதியத்துக்கு வழங்கியுள்ளேன். அத்துடன் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர்கள், உயர் அதிகாரிகள் தங்களின் மாதக் கொடுப்பனவை வழங்க முன்வந்துள்ளார்கள். கல்வி அமைச்சுக்குப் பொறுப்பாக 2,40,000 ஆயிரம் ஆசிரியர்கள் சேவையாற்றுகின்றார்கள். அத்துடன் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சில் சேவையாற்றும் ஏனைய சேவையாளர்கள் உள்ளடங்கலாக 3 இலட்சம் பேர் சேவை ஆற்றுகின்றார்கள்.

இவர்கள் அனைவரும் தங்களின் ஒரு நாள் சேவைக் கொடுப்பனவை நிதியத்துக்கு வழங்கினால் சுமார் 500 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெறும். தற்போதைய நெருக்கடியான நிலையை வெற்றிக் கொள்ள அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் – என்றார். (ப)

# தர்மபுரம் மக்களுக்கு உறவுகள் உதவிக்கரம்

கிளிநொச்சி,ஏப்.9

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, தர்மபுரத்தில் வறிய நிலையில் வசிக்கின்ற குடும்பங்களுக்கு, புலம்பெயர் உறவுகள் உதவிக்கரம் நீட்டியுள்ளனர். பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உலர் உணவுகளை வழங்குவதற்கு பிரான்ஸ் மற்றும் சுவிஸ் வாழ் புலம்பெயர் தமிழ் உறவுகள் நிதியுதவி வழங்கியுள்ளனர்.

அவர்களது நிதியில், தர்மபுரம் கிழக்கு, தர்மபுரம் மேற்கு பிரதேசத்துக்கு 89 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு தொகுதி உலர் உணவுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. (சு-222)

# தனிமைப்படுத்தலில் தப்பியவர் மாட்டினார்

கொழும்பு,ஏப்.9

தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்று,மறைந்திருந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டார். கொரோனா தொற்றாளர் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து முடக்கப்பட்ட அக்குறணைப் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்று, மாவத்தகம பரஹாதெனிய பிரதேசத்தில் மறைந்திருந்த 32 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டவராவார்.

சந்தேகத்துக்குரிய நபரொருவர் பரஹாதெனியப் பிரதேச வீடொன்றில் தங்கியுள்ளார் என்று சுகாதாரப் பரிசோதகர்களுக்குக் கிடைத்த தகவலுக்கு அமையவே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது மனைவி, பிள்ளைகள் பசியுடன் இருப்பதாகப் போலித் தகவல்களை தெரிவித்து, குருகொடப் பிரதேச கிராம உத்தியோகத்தர் ஊடாக அலவத்துகொடப் பிரதேச செயலாளர், பொலிஸாரிடம் அனுமதி பெற்றே அவர் அக்குறணையை விட்டுத் தப்பியோடி மறைந்திருந்தார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (சு-114)

# மதுப்போத்தல்களுடன் ஒருவர் சிக்கினார்

வவுனியா,ஏப்.9

ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள நிலையில் மதுபானப் போத்தல்களை எடுத்துச் சென்ற நபர், கனகராயன்குளம் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

சந்தேகத்துக்கிடமான முறையில் வீதியால் பயணித்த நபரை வழிமறித்த பொலிஸார், அவரது பையைச் சோதனையிட்டனர். அவர் அதற்குள் அதிகளவான மதுப்போத்தல்கள் மறைத்து வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது, அவரிடமிருந்து கால் போத்தல் அளவிலான 48 மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டன. நபரும் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (சு-110)



# மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஏப்.9

சப்ரகமுவ, ஊவா, மத்திய, மேல், வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல இடங்களில் இன்று பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் என்று வானிலை ஆராச்சி நிலையம் அறிவித்துள்ளது. (ப)

# வைரஸை விரட்டும் 'ஆவி'!

## விசேட வைத்திய நிபுணர் அனுருத்த பாதெனிய தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 9

பக்றீரியா மற்றும் வைரஸ் தொற்று என்பவற்றுக்கு கொத்தமல்லி, வெனிவேல் என்பவற்றை பயன்படுத்துவதன் பலாபலன் பற்றி ஆராயப்பட்டுள்ளது. அதன்படி சுடு நீரில் மூலிகை இலைகளை இட்டு துணியால் முழுமையாக மூடி ஆவி பிடித்தலை பின்பற்றுமாறு அறிவுறுத்த ஏகமனதாகத் தீர்மானித்திருக்கின்றோம் என்று விசேட வைத்திய நிபுணர் அனுருத்த பாதெனிய தெரிவித்தார்.

அத்தோடு மூலிகை இலைகளைப் பயன்படுத்தி ஆவி பிடிக்கும் முறைமையை பின்பற்றுவது சிறந்த நோய்த் தடுப்பு முறைமை எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், "கொத்தமல்லி மற்றும் வெனிவேல் தொடர்பில் அறிவியல் தொழில்நுட்ப அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனை அறிக்கை எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

அதில் நோய்த்தடுப்பு சக்தி தொடர்பில் மூன்று பிரிவுகள் இணங்காணப்பட்டுள்ளன. அந்த மூன்று முறைமைகளையும் ஆராயும் போது பக்றீரியா தொற்றுக்காக கொத்தமல்லி பயன்படுத்தப்படுவதன் மதிப்பும் அதேபோன்று வைரஸ் தொற்றுக்காக வெனிவேல் பயன்படுத்துவதிலுள்ள பயனும் இனங்காணப்பட்டுள்ளன.

இந்தச் சந்தர்ப்பத்தில் கொரோனா வைரஸ் தொடர்பில் எனது தலைமையில் ஆராய்ச்சி குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

மூலிகைகளைக் கொதி நீரில் இட்டு ஆவி பிடிப்பதிலுள்ள பயன்கள் தொடர்பில் இந்த குழு ஏகமனதான தீர்மானமொன்றை எடுத்திருக்கிறது. சீனாவில் சூடான நீர் பருகுதல் மற்றும் வெவ்வேறு முறைமைகளில் ஆவி பிடித்தல் என்பன பின்பற்றப்பட்டமை எம்மால் அவதானிக்க முடிந்தது. மேற்குலக நாடுகளில் ஆவி பிடித்தல் முறைமையைப் பின்பற்றுவது அரிது என்பதால் அந்த மக்கள் கூந்தல் உலர்த்தும் இலத்திரனியல் உபகரணத்தைப் பயன்படுத்துகின்றனர். எனினும் நாம் இது வரையில் பல்வேறு ஆராய்ச்சிகளை முன்னெடுத்திருக்கின்றோம்.

அதன் மதிப்பை உலக நாடுகளுக்கும் தெரியப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். எனினும் அது வரையில் ஆராய்ச்சிக் குழு என்ற ரீதியில் நாம் ஒவ்வொருவரும் வீடுகளில் சிறு பாத்திரத்தில் சுடு நீரில் மூலிகை இலைகளை இட்டு துணியால் முழுமையாக மூடி ஆவி பிடித்தலை பின்பற்றுமாறு அறிவுறுத்த ஏகமதான தீர்மானித்திருக்கின்றோம். இதன் போது கண்களுக்குப் படாமல் பாதுகாப்பாக ஆவி பிடிக்க வேண்டும் – என்றார். (ப)

# ஊரடங்கில் இளைஞர் சாவு!

## பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அலட்சியமே காரணமெனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப்.9

**யாழ்ப்பாணம், அராலி மத்தி, கோட்டைக்காட்டில் உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்ட இளைஞன் ஒருவர் உரிய நேரத்தில் மருத்துவமனையில் சேர்க்கப் படாததால் உயிரிழந்துள்ளார் என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.**

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்துள்ளது. ஊரடங்கு வேளையில் உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்ட இளைஞரை மருத்துவமனையில் சேர்ப்பிப்பதற்கு அந்தப் பிரதேச சுகாதாரப் பரிசோதகர் ஒத்துழைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. அதே இடத்தைச் சேர்ந்த நாகேந்திரன் புஸ்பராசா (வயது-30) என்ற இளைஞரே உயிரிந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞர் சில ஆண்டுகளுக்கு முன்னர் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்துள்ளார். அவருக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை திடீரென உடல் நலக் குறைவு ஏற்பட்டுள்ளது. அயலவர்கள் அவசர அம்புலன்ஸ் சேவைக்கு அழைப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

தற்போது கொரோனா தொற்று நாடளாவிய ரீதியில் காணப்படுவதால் சுகாதாரப் பரிசோதகரின் பரிந்துரையின்படியே நோயாளரை மருத்துவமனையில் சேர்ப்பிக்க முடியும் என்று அயலவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதையடுத்து இந்த விடயம் அந்தப் பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு சென்ற பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் சுகாதார சேவைகள் ஊழியர்கள் நிலமையை ஆராய்ந்துள்ளனர். அவருக்கு ஏற்பட்டிருப்பது சாதாரண நோய் எனவும், பிரதேச மருத்துவமனையில் சிகிச்சை பெறுமாறும் அவர்கள் ஆலோசனை கூறிச் சென்றுள்ளனர். அன்று மதியம் இளைஞரின் உடல் நிலை மோசமானது. அதையடுத்து அயலவர்கள் மீண்டும் அம்புலன்ஸ் சேவையை நாடியுள்ளனர். ஆனால் சேவை மறுக்கப்படவே, நீண்ட நேரம் தாக்கப்பட்டு, இளைஞரை மருத்துவமனையில் சேர்த்தபோதும், அந்த இளைஞர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் பொறுப்பற்ற விதமாக நடந்து கொண்டார் என்றும், அதனாலேயே அந்த இளைஞர் உயிரிழக்க நேரிட்டது எனவும் உறவினர்களும், அயலவர்களும் குற்றஞ்சாட்டுகின்றனர். பொதுச் சுகாதார பரிசோதகருக்கு நிலைமையை எடுத்துக் கூறியபோதும், தேவையேற்படின் இளைஞரை ஓட்டோவில் கொண்டு செல்லுங்கள் என்று அவர் அலட்சியமாகப் பதிலளித்தார் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பாகப் பொதுச் சுகாதார பரிசோதகரின் கருத்தை அறிவதற்கு நேற்றும், இன்றும் 'உதயன்' முயற்சித்தபோதும், அவரது கையடக்கத் தொலைபேசியின் இயக்கம் நிறுத்தப்பட்டிருந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இளைஞரின் உடல் மோசமடைந்தபோது, பொதுச் சுகாதார பரிசோதகருக்கு அழைப்பெடுத்தபோதும் அவரது கையடக்கத் தொலைபேசி இயங்கவில்லை என்று உறவினர்களும், அயலவர்களும் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வலி. மேற்கு பிரதேச சபை தலைவர் நடனேந்திரனிடம் கேட்டபோது, "பொதுச் சுகாதார பரிசோதகர், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் கீழ் செயற்படும் ஒருவர். எனவே இந்த விடயம் தொடர்பாக நேரடியான நடவடிக்கையை எம்மால் எடுக்க முடியவில்லை. ஆயினும் சம்பவம் குறித்து சுகாதார வைத்திய அதிகாரியுடன் பேசியுள்ளேன். அவர் நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளார்" என்றார். நாட்டில் தற்போதுள்ள சூழ்நிலையில், பிரதேசங்களில் நோய் வாய்ப்படும் நோயாளர்களை பரிசோதித்து வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டிய பொறுப்பில் இருக்கக் கூடிய ஓர் அதிகாரியின் கைபேசி எப்போதும் இயக்கமற்ற நிலையில் இருப்பது தொடர்பில் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த வலி மேற்கு பிரதேச சபை தலைவர், அது குறித்து தாம் உடனடியாக சுகாதார வைத்திய அதிகாரியுடன் பேசி கவனத்தில் கொள்ளவைப்பதாகவும், பொறுப்புவாய்ந்த அதிகாரி இப்படி செயற்பட முடியாது என்றும் கூறினார். (எ)



## நிவாரணப் பணிகளில் 'எதிர்காலத்துக்கான பாதை'

கிளிநொச்சி, ஏப்.9

கிளிநொச்சியில் நிவாரணப் பணிக்காக 'எதிர் காலத்துக்கான பாதை' எனும் பிரித்தானிய தமிழ் தொண்டு நிறுவனம் பல லட்சம் ரூபாவினை ஒதுக்கியுள்ளது.

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு இயங்கி வரும் குறித்த அமைப்பு தாயகத்தில் வாழ்வாதாரச் செயற்திட்டங்கள் ,மாணவர்களுக்கான கற்றல் ஊக்குவிப்பு ,போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை தரமுயர்த்துதல் போன்ற செயற்பாடுகளை பல ஆண்டுகளாக முன்னெடுத்து வருகின்றது. இதன் தொடர்ச்சியாக 'கொவிட் 19' வைரஸ் தாக்கத்தினால் கிளிநொச்சியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நாளாந்த கூலி வேலை செய்யும் குடும்பங்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அன்றாட உணவுக்கு அல்லல் படுகின்றமையை நிவர்த்தி செய்யும் நோக்கோடு பல லட்சம் ரூபாவினை உலணருவுப் பொருள்கள் வழங்குவதற்காக ஒதுக்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஆரம்பகட்டமாக சுமார் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மிகவும் வறுமை கோட்டுக்கு கீழ் இருக்கும் குடும்பங்கள் மற்றும் ,பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என தெரிவு செய்யப்பட்ட 300 குடும்பங்களுக்கான உணவுப் பொதிகள் தர்மபுரம் ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலய தர்மகர்த்தா ஊடாக நேற்றுமுன் தினம் வழங்கப்பட்டுள்ளன. (ப)

## கிளிநொச்சியில் பொருளுதவி

கிளிநொச்சி,ஏப்.9

கிளிநொச்சி மக்கள் அமைப்புக்களும், பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களும் இணைந்து முன்னெடுக்கும் சமூக நலத்திட்டத்தில் 1150 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

கரைச்சி பிரதேசத்துக்கு உட்பட்ட அக்கராயன்குளம், ஸ்கந்தபுரம் கிராமங்களை உள்ளடக்கிய சுமார் 140 குடும்பங்களுக்கு நேற்றுப் பொதிகள் வழங்கப்பட்டன.

வட்டக்கச்சி மத்திய கல்லூரி, பரந்தன் இந்து மகா வித்தியாலயம்,கிளிநொச்சி மத்திய கல்லூரி, இராமநாதபுரம் மகா வித்தியாலயம், இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, பெரியகுளம் மகா வித்தியாலயம், முழங்காவில் மகா வித்தியாலயம், வவுனியா வளாக பழைய மாணவர் குழுமம் ஆகியவற்றுடன் இணைந்து கிளிநொச்சி கல்வி அபிவிருத்தி செயலணி, கிளிநொச்சி கல்வி அபிவிருத்தி அறக்கட்டளை, பரந்தன் இளைஞர் வட்டம், கிளிநகர் சித்தி விநாயகர் ஆலயம் ஆகியன இந்த உதவிகளை வழங்கியுள்ளன.(க-222)







## மாற்றுவலுவுள்ளோருக்கு உதவி

மன்னார், ஏப்.9

மன்னார் மாவட்ட இலங்கை தமிழரசு கட்சியின் கிளையால், மன்னாரைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் அமைப்பான தேனீ அமைப்பினருக்கு உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. கொரோனாத் தொற்றால் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தமக்கும் உலருணவுப் பொருள்களைத் தந்துதவுமாறும் தேனீ அமைப்பினர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே நேற்று புதன் கிழமை காலை இந்த உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான 500 உலர் உணவுப் பொதிகள் அந்த அமைப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளன. (ப-56)

# விவசாயப் போதனாசிரியர்கள் உடன் கடமைக்கு செல்லுங்கள்

## வடக்கு விவசாய அமைச்சின் செயலர் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஏப்.9**

**விவசாயப் போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள் (விவசாய விரிவாக்கம்) அனைவரும் தங்களது சேவை நிலையங்களுக்கு உடனடியாகச் சென்று கடமையாற்றுமாறு வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அ.சிவபாலசுந்தரன் கேட்டுக்கொண்டுள்ளார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் விவசாய அமைச்சுக்குரிய செயற்பாடுகள் அத்தியவாசிய சேவையாக முக்கியப்படுத்தப்பட்டுள்ளமையாலும், கமநல அபிருத்தி ஆணையாளர் நாயகத்தின் "03/ 2020 சுபீட்சம்" சுற்றறிக்கைக்கு அமைய வீட்டுத்தோட்டங்களை அபிவிருத்தி செய்யும் துரித வேலைத்திட்டத்துக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளை வழங்க வேண்டியுள்ளதாலும் வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழ்க் கடமையாற்றும் விவசாயப் போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள் (விவசாய விரிவாக்கம்) அனைவரும் தங்களது சேவை நிலையத்துக்கு உடனடியாகச் சென்று கடமையாற்றுமாறு கேட்டுக் கொள்ளவதுடன் கொரோனா நோய்த்தொற்றில் இருந்து பாதுகாப்பைப் பெறுவதற்காக சுகாதாரத் துறையினரால் விடுக்கப்பட்டுள்ள சுயபாதுகாப்பு அறிவுறுத்தல்களைப் பின்பற்றிக் கடமையாற்றுமாறும் கேட்டுக் கொள்கிறேன். மேலும் தமது சொந்த மாவட்டங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அலுவலக அடையாள அட்டையைப் பயன்படுத்தி கடமைக்குச் செல்ல முடியும் என்பதுடன், வெளிமாவட்டங்களில் கடமையாற்றும் அலுவலர்களுக்கான பிரயாண அனுமதி மாவட்டச் செயலரூடாகப் பெற்றுக்கொடுப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக தகவல்கள் தேவைப்படுபவர்கள், வடமாகாண விவசாய அமைச்சு அலுவலகத்துடன் அல்லது மாகாண விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் - என்றுள்ளது. (ப)



# யாழ்ப்பாணத்துக்கு காலாவதியான அரிசி மூடைகள்

## சாரதி கைது

யாழ்ப்பாணம், ஏப்.9

மூதூரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி அத்தியாவசிய சேவை எனப் பொறிக்கப்பட்ட பாரவூர்தியில் காலாவதியான அரிசி மூடைகள் எடுத்து வரப்பட்டுள்ளன. லொறியின் சாரதி கைது செய்யப்பட்டார்.

ரொட்டவெள இராணுவச் சோதனைச் சாவடியில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே, சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். பாரவூர்தியில் 400 கிலோ கிராம் அரிசி மூடைகள் காலாவதியான திகதி பொறிக்கப்பட்ட பைகளில் எடுத்துச் செல்வதாகக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, மொரவெள பிரதேசத்துக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட சோதனையில் மூடைகளைக் கைப்பற்றினர். கைது செய்யப்பட்டவர் புத்தளம், பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய நபர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-114)

# 60 குடும்பங்களுக்கு உதவி

கிளிநொச்சி,ஏப்.9

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பொருளாதார நிலையில் பின்தங்கிய 60 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி, இராமநாதபுரம் ஆலடி, நாவல் நகர்,மாந்தோப்பு ஆகிய பகுதிகளில் உள்ள 30 குடும்பங்களுக்கும், வட்டக்கச்சி ஆறுமுகம் வீதி, பத்துவீடு ஆகிய பகுதிகளில் உள்ள 30 குடும்பங்களுக்கும் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா ஆயிரத்து 600 ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. லண்டனைச் சேர்ந்த அன்பர் பேர்.பாக்கியராஜாவின் நிதி உதவியில் இராமநாதபுரத்தைச் சேர்ந்த ஆசிரியர் நிகேதரனின் ஏற்பாட்டில் மேற்படி உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-222)

# மருந்து, கிருமி நீக்கிகளை விநியோகிக்க நடவடிக்கை

கொழும்பு,ஏப்.9

நோய் எதிர்ப்பு சக்திக்கான மருந்து மற்றும் கிருமி நீக்கிகளை பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கு ஆயுள்வேதத் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்று இலங்கை ஆயுள்வேத ஆணையாளர் நாயகம் சத்துர குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைக்கு அமைவாக, ஆயுள்வேத உற்பத்திகளைப் பொது மக்களுக்கு மாகாண ஆயுள்வேதத் திணைக்களங்கள் ஊடாக, வீடுகளுக்கே விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று ஒழிப்பு தொடர்பில் ஆயுள்வேத மற்றும் சுதேச மருத்துவம் தொடர்பிலான பரிந்துரைக்கு, சுகாதார அமைச்சினால் விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவால் ஆயுள்வேத முறையிலான மருந்துகள் தயாரிக்கப்பட்டுள்ளன. வேப்பிலை மற்றும் தேசிக்காய் இலைகளைப் பயன்படுத்தி புகையிடுமாறு, சுகாதார அமைச்சின் விசேட குழு பரிந்துரை செய்துள்ளது. இதேவேளை, கொத்தமல்லி, இஞ்சி உள்ளிட்ட மூலிகைகள் அடங்கிய கசாயத்தைப் பருகுவதற்கும் ஆயுள்வேதத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. இந்த மூலிகைகள் அடங்கிய தயாரிப்பொன்றை, ஆயுள்வேதத் திணைக்களம் தற்போது மேற் கொண்டுள்ள நிலையில், அவற்றைப் பொதிகளாக்கி விநியோகிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## ஆயுள்வேத மருத்துவமனைகள்

# ஊரடங்கு வேளையிலும் மக்களுக்காகத் திறக்கும்

கொழும்பு, ஏப். 9

ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் வேளையிலும் அனைத்து ஆயுள்வேத மருத்துவமனைகளும் திறந்திருக்கும் என அத்தியாவசிய சேவை தொடர்பான ஜனாதிபதி செயலணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலணி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

அத்தியாவசிய சேவை தொடர்பான ஜனாதிபதி செயலணியின் கூட்டம் பொதுஜன பெரமுன முன்னணியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ச தலைமையில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சியின் பங்குப்பற்றலுடன் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் ஆயுள்வேத மருத்துவம் தொடர்பான பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அனைத்து ஆயுள்வேத வைத்தியசாலைகளும் ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலிருக்கும் வேளையிலும் திறந்திருக்கும்.

பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆயுள்வேத மருந்து விற்பனை நிலையங்களில் ஒன்றேனும் குறைந்தபட்சம் அத்தியாவசிய மருந்துப் பொருள் விநியோக நடமாடும் சேவையில் ஈடுபட அனுமதி வழங்கப்படும். கொத்தமல்லி, இஞ்சி மற்றும் மருத்துவ மஞ்சள் கட்டை உள்ளிட்ட ஆயுள்வேத மருந்துகள் தற்போது அதிகளவில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இவற்றை மேலும் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். ஆயுள்வேத சிகிச்சை முறைமைகளை முன்னெடுப்பவர்களுக்கு ஆயுள்வேத வைத்தியர்கள் சிகிச்சை பெறுபவரது வீட்டுக்குச் சென்று சிகிச்சை வழங்க அனுமதி வழங்கப்படும் என்னும் தீர்மானங்களே இதன் போது எடுக்கப்பட்டன. (ப)



# விலைகூட்டி விற்றல், பதுக்கலைத் தடுக்க 3 குழுக்கள் யாழில் களத்தில்!

யாழ்ப்பாணம், ஏப்.9

யாழ்ப்பாணத்தில் நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் பொருள்கள் விற்பனை செய்யாமை, அத்தியாவசியப் பொருள்களைப் பதுக்குதல் போன்ற செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு மாவட்ட செயலக பாவனையாளர் அதிகார சபையினர் 3 குழுக்களாக களத்தில் இறங்கியுள்ளனர் என்று அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு தொடர்ச்சியாக நடைமுறையிலுள்ள நிலையில், மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் நியாயமான விலையில் விற்பனை செய்யப்பட வேண்டும். பொருள்களைப் பதுக்கக்கூடாது என்பதற்காக மாவட்டச் செயலரின் வழிகாட்டலில் மூன்று குழுக்கள் பரிசோதனையில் ஈடுபட்டு வருகின்றன.

பருத்தித்துறை, நெல்லியடி, தீவகம் போன்ற பகுதிகளுக்கு நேற்று முன்தினம் இந்தக் குழு பரிசோதனையில் ஈடுபட்டது. ஒவ்வொரு நாளும் யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்தப் பரிசோதனைகள் தொடரும். கிராம புறத்திலுள்ள கடைகளிலேயே அதிக விலையுடன் பொருள்கள் விற்கப்படுகின்றன என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. பரிசோதனை நடவடிக்கைகளுக்கான இந்தக் குழுவுக்கு விசேட வாகன வசதிகளை மாவட்டச் செயலர் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-7)

# இந்தோனேசியாவில் இருந்து மன்னார் வந்தவருக்கு கொரோனா!

## முடக்கப்பட்டது தாராபுரம் கிராமம்

மன்னார்,ஏப்.9

இந்தோனேசியாவில் இருந்து மன்னாருக்கு வந்த ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மன்னார் பிரதேச செயலர் பிரிவில் உள்ள தாராபுரம் கிராமம் நேற்றுப் புதன் கிழமை அதிகாலை முதல் எதிர்வரும் ஒரு வாரத்துக்கு முழுமையாக முடக்கப்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.



இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்; கடந்த மாதம் 18 ஆம் திகதி மன்னார் தாராபுரம் கிராமத்தில் நடைபெற்ற மரணச்சடங்கு ஒன்றில் கலந்து கொண்டு விட்டு புத்தளத்துக்குச் சென்ற ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. குறித்த நபர் கடந்த 15 ஆம் திகதி இந்தோனேசியாவில் இருந்து இலங்கைக்கு வந்திருந்தார். அதற்கு பின் 18ஆம் திகதி மன்னார் தாரபுரம் கிராமத்தில் நடைபெற்ற மரணச்சடங்கில் கலந்து கொண்டு பின் மீண்டும் புத்தளத்துக்குச் சென்றுள்ளார். இந்த நிலையில் குறித்த நபர் புத்தளத்தில் இரண்டு வராங்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். பின்னர் சமூக ரீதியில் அவருக்குப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது அவர் நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை தெரிய வந்துள்ளது. இந்த நிலையில் அவர்கள் உடனடியாக மன்னாரில் உள்ள உறவினர்களுக்கு அறிவித்துள்ளதோடு, பொலிஸாருக்கும் அறிவித்துள்ளனர். மன்னார் பொலிஸார் மற்றும் சுகாதாரத் துறையினர், தாராபுரம் கிராமத்தில் உள்ள இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளையும் எதிர்வரும் ஒரு வாரத்துக்கு முடக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். தாராபுரம் கிராம மக்களுக்கு நோய் அறிகுறிகள் தென்படுகின்றதா? என்பதனை அவதானிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

குறித்த நபர் இங்கு வந்து நின்ற இரண்டு நாள் காலப்பகுதிக்குள் அவருடன் நெருங்கிப் பழகிய இரண்டு குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நோய்ப் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கிராமங்களிலிருந்து சுமார் 500 குடும்பங்கள் வரை இவ்வாறு முடக்கப்பட்டுள்ளனர் என்றார். (ஐ-56,60)

# 45 வாகனங்கள் பறிமுதல்

வடமராட்சி,ஏப்.9

ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கும் போது, வீதியில் நடமாடியோரின் வாகனங்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

சுமார் 45 வாகனங்கள் நெல்லியடிப் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மீன் விற்பனையாளர்கள் மற்றும் கூலித் தொழிலாளிகளின் வாகனங்களும் இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-422)



# நாய்களுக்கும் சமைத்த உணவு

## இளைஞன் முன்மாதிரி

யாழ்ப்பாணம், ஏப்.9

கொரோனாத் தாக்கம் காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தால், முடங்கிப்போயுள்ள யாழ்ப்பாணக் குடா நாட்டில், பசியால் அந்தரிக்கும் நாய்களின் பசி போக்க அவற்றுக்குச் சமைத்த உணவினை வழங்கும் செயற்பாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இறங்கியுள்ளார்.

சங்கானை இந்து இளைஞர் மன்றத்தின் அங்கத்தவரான சாம்பசிவம் தனாதீபனே இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார். ஊரடங்கால், உணவகங்கள், மீன் சந்தைகள் உள்ளிட்ட நாய்கள் தமது உணவுகளைப் பெற்றுக்கொள்ளும் அனைத்து இடங்களும் முடக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் அவை பசியால் வீதிகளில் அந்தரிக்கின்றன. இதை உணர்ந்த அந்த இளைஞன் இளைஞர் மன்ற அங்கத்தவர்களின் ஒத்துழைப்போடு, யாழ்ப்பாணத்தில் வீதிகளில் உண்ண உணவின்றித் திரியும் நாய்களுக்கு சமைத்த உணவுகளை வழங்கி வருகிறார். அவருடைய இந்தச் சேவை பலராலும் பாராட்டப்பட்டு வருகின்றது. (ப-7)

# கோரோனாவுடன் இனவாத வைரஸையும் ஒழிக்க வேண்டிய நிலையில் இலங்கை

## ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.9

கொரோனா வைரஸுடன் இனவாத வைரஸையும் கட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. நாட்டின் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பது அனைவரதும் கடமை. ஒருசிலர் சட்டத்துக்கு முரணாக நடப்பதற்காக ஒட்டுமொத்த சமூகத்தையும் குற்றம் சாட்டுவது முறையில்லை என ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அதன் ஓர் அங்கமாகவே ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி மக்கள் ஒன்று கூடல்களை நிறுத்தியுள்ளது. என்றாலும் ஒரு சில பிரதேசங்களில் ஊரடங்குச் சட்டத்தை மீறும் வகையில் சிலர் நடந்து கொள்கின்றனர். நாட்டின் சட்டத்துக்கு கட்டுப்பட்டு நடப்பது அனைவரதும் கடமையாகும். அதனை மீறுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆனால் ஒரு சில சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சட்டத்தை மீறிச் செயற்படும் போது அதனை ஒரு சில சிங்கள தனியார் ஊடகங்கள் பெரிதுபடுத்தி, அதனைக் குறித்த சமூகத்தின் தவறாகச் சுட்டிக்காட்ட முயற்சிக்கின்றன. இவர்களின் நடவடிக்கையால், பெரும்பான்மை மக்கள் மத்தியில் சிறுபான்மை சமூகம் தொடர்பாக தவறான சிந்தனையே ஏற்படுகின்றது. குறிப்பாக முஸ்லிம்கள் தான் கொரோனா வைரஸைப் பரப்புவதாக சுட்டிக்காட்ட முயற்சிக்கின்றன. ஒரு சில முஸ்லிம் நபர்கள் சட்டத்துக்கு முரணாகச் செயற்பட்டதற்காக அதனை ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் மீதும் குற்றம் சாட்டுவது முறையல்ல. அத்துடன் அண்மையில் கொரோனா தொற்றுத் தொடர்பாக பரிசோதிக்கச் சென்ற பொதுச் சுகாதார அதிகாரி ஒருவர் மீது இளைஞர் ஒருவர் கத்தியால் குத்தியுள்ளார். குறித்த இளைஞர் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதால் ஊடகங்களில் அது தொடர்பில் செய்தி மாத்திரமே வந்தது. ஆனால் இதனை ஒரு சிறுபான்மை இனத்தவர் செய்திருந்தால், அது இன்று பெரியளவில் ஊதிப் பெருப்பிக்கப்பட்டிருக்கும்.

நாட்டில் இருக்கும் ஒரு சில தனியார் சிங்கள ஊடகங்கள் மக்களுக்கு செய்திகளை வழங்குவதைவிட சிங்கள மக்களுக்கு இவ்வாறான இனவாதக் கருத்துக்களை பிரசாரம் செய்யும் நடவடிக்கையையே மேற்கொள்கின்றன. கொரோனா வைரஸுக்கு பாதிக்கப்பட்ட நாடுகள் வைரஸை கட்டுப்படுத்த அனைத்து தரப்பினரும் இணைந்து செயற்படும்போது எமது நாட்டில் கொரோனாஇனவாதமாகியுள்ளதால் வைரஸைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன் இனவாத பிரசாரங்களையும் கட்டுப்படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது - என்றார். (ப)



# அரிசி விலையேற்றத்தை தவிர்க்க கூ. சங்கங்களுக்கு நெல்லை வழங்குக

## நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.9

வடக்கின் 5 மாவட்டங்களிலும் உள்ள நெல் சந்தைப்படுத்தல் சபைகளின் களஞ்சியங்களில் உள்ள நெல்லை கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி அரிசியின் விலை ஏற்றத்தை கட்டுப்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

வடக்கின் 5 மாவட்டங்களிலும் தனியார் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அப்பால் நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் மட்டும் 7 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் கையிருப்பில் உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இதனை அந்த மாவட்டத்தில் விநியோகிக்க அனுமதியளித்தாலே அரிசியின் விலையில் எக்காரணம் கொண்டும் ஏற்றம் ஏற்படாது.

அதாவது வடக்கின் யாழ்ப்பாண மவட்டத்தில் 156 மெற்றிக்தொன் நெல்லும், மன்னார் மாவட்டத்தில் 943 மெற்றிக் தொன் நெல்லும், கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 793 மெற்றிக் தொன் நெல்லும், வவுனியா மாவட்டத்தில் ஆயிரத்து 890 மெற்றிக் தொன் நெல்லும் உள்ளதோடு முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 293. மெற்றிக்தொன் நெல்லும் கையிருப்பில் உள்ளது. எனவே இவற்றை மாகாணத்துக்குள்ளே அரிசி ஆலைகள் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகித்து மாகாணத்தின் அரிசி விலையேற்றத்தை இந்த நெருக்கடியான காலத்தில் போக்குவதற்கு உதவ வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ப-105)

# கொவிட்-19 தொற்றுநோய் பரவலினால் ஏற்பட்ட வாழ்க்கை மாற்றம்:

## ஓர் அகநோக்கு 06

**‘கொவிட்- 19’ எனும் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்படுபவர்கள் அல்லது அந்தத் தொற்றுக்கு இலக்காகியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் தொடர்பாக சமூகத்தில் ஒரு கலவையான உணர்வு காணப்படுகிறது. இவ்வாறு, உணர்வு ரீதியிலமைந்த எதிர்வினைகள் எவ்வாறான விளைவுகளை ஏற்படுத்துகின்றன?**



Dr. சா. சிவயோகன்
உளமருத்துவ நிபுணர்

கொவிட்19 எனப்படுவது ஒரு புது வகையான கொரோனா வைரஸினால் ஏற்படுகின்ற தொற்று நோயாகும். அது இப்போது சகலவிதமான எல்லைகளையும் கடந்து, உலகம் முழுவதும் பரவி, எந்தவித பேதமும் பார்க்காது அனைத்து மனிதரையும் பாதித்துக் கொண்டிருக்கின்றது. இந்த வகையான வைரஸ் புதிதாக இருப்பதுவும், அது அளவுக்கதிகமான மனிதர்களைப் பாதிப்பதுவும், அதனால் ஏற்படுகின்ற நோயின் தாக்கங்கள் வைத்தியத்துறையின் சேவைவழங்கல் கொள்ளளவைத் தாண்டி இருப்பதுவும், சிலவேளைகளில் நோயின் விளைவுகள் கடுமையானவையாக அமைந்து மரணத்தை ஏற்படுத்துவதும், எம் அனைவரையும் இந்த நோய் தொடர்பாக எதையும் எதிர்வுகூற முடியாத, ஒரு திகைப்பான உணர்வினுள் ஆழ்த்தியிருக்கிறது.

அத்துடன், இந்த நோய் மிக வேகமாகப் பரவிவிடக் கூடியதாகவிருப்பதும், அது எவ்வாறு பரவுகிறது என்பது துல்லியமாக அறியப்படாதிருப்பதும், நோய்க்கிருமியைக் காவிக்கொண்டு பரப்புபவர் யார் என்பது பல வேளைகளில் வெளித்தெரியாதிருப்பதும் இந்த நோய் தொடர்பான மர்மங்களை அதிகரிக்கின்றன. ஒரு விடயம் ஐயந்திரிபுறத் தெளிவுறாத வரைக்கும், அந்த விடயம் தொடர்பான ஊகங்களும், கட்டுக் கதைகளும் தொடர்ந்து கொண்டிருப்பது தவிர்க்க முடியாததாகிறது.

ஒரு விடயம் புதிதாக இருக்கும்போது, திகைப்பையும் பயத்தையும் தருகின்றபோது, தெளிவாக இல்லாதபோது அவ்விடயம் தொடர்பான பல்வேறு உணர்வுகள் ஏற்படுவது இயல்பானதே. பயம் அவற்றுள் முதன்மையானது. ஆனாலும், அதனைவிட, பதற்றம், நிச்சயமற்ற தன்மை, சந்தேகம், கோபம், குற்றவுணர்வு, மனச்சோர்வு, கையாலாகாத நிலை, சலிப்பு போன்ற ஏனைய பலவிதமான உணர்வுகளும் மேற்கிளம்புகின்றன.

இந்தவிதமான உணர்வுகளுக்கும் மேலாக இந்த நோய் தொடர்பாகவும், நோய்த்தொற்று ஏற்பட்டவர்கள் தொடர்பாகவும் ஓர் இழிவான பார்வை, அசூயை மனப்பாங்கு, தீண்டத்தகாத உணர்வு போன்றன உருவாகியிருக்கின்றன. இவற்றின் காரணமாக கொவிட்19 தொற்றுத் தொடர்பாக ஒரு களங்க மனப்பாங்கு, சமூக நாணம் (stigma) ஏற்பட்டிருக்கின்றது.

கொவிட்19 தொற்றுத் தொடர்பாக ஏற்பட்டிருக்கும் இந்தக் களங்க மனப்பாங்கினால், இந்நோய்த் தொற்று ஏற்பட்டவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். பல இடங்களில் இந்த நோய்த்தொற்று ஏற்பட்டவர்களை, ஒரு குற்றவாளிபோல் பார்க்கின்ற தன்மை காணப்படுகின்றது. ஒருவரும் கடவுளிடம் சென்று தமக்கு நோய் ஒன்று தருமாறு வேண்டுவதில்லையே! அவ்வாறு இருக்கின்ற பொழுது, ஒருவர் எதிர்பாராதவிதமாகவோ, தற்செயலாகவோ, அறியாத்தனத்தாலோ, அல்லது விபத்துப்போலோ இந்த நோய்த்தொற்றுக்கு ஆளாகும் போது, அவரை எவ்வாறு குற்றவாளியாக்க முடியும்? மேலும், இந்த நோயானது ஒருவரிடமிருந்து இன்னுமொருவருக்கு இலகுவில் தொற்றிவிடக் கூடியது என்பதனால், இந்த நோய்த் தொற்று ஏற்பட்ட ஒருவரை அணுகி அவருக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்கு, வைத்தியத்துறை சார்ந்தவர்கள் உட்படப், பலர் தயக்கம் காட்டுகிறார்கள். நோய்த் தொற்று ஏற்பட்ட ஒருவர் தனிப்படுத்தப்படுவார். அவரைச் சந்திப்பதற்கு எவருக்கும் அனுமதி கிடைக்காது. நோய்த் தொற்றுக்கு எதிரான பாதுகாப்புக் கவசங்களின் பற்றாக்குறை காரணமாக, சில சமயங்களில் அவரைத் தூரத்தில் தள்ளி வைத்தபடியே அவருடன் தொடர்பாடப்படும், அவருக்கான அறிவுறுத்தல்கள் தொலைவிலிருந்து வழங்கப்படும். அவருக்குச் சாதாரண நோய்கள் போன்று பொது வைத்தியசாலைகளில் வைத்து, அல்லது பொதுவான மருத்துவ விடுதிகளில் வைத்துச் சிகிச்சையளிக்கப்படமாட்டாது. இந்த நடைமுறைகள் யாவும் தேவையான பல காரணங்களை அடியொற்றி நிகழ்ந்தாலும், அவை ஒரு கூட்டான நன்மைக்காக உருவாக்கப்பட்ட ஏற்பாடுகளாக இருந்தாலும், அவையனைத்தும் இந்த நோய்த்தொற்றுத் தொடர்பான பயத்தையும், களங்கத்தையும் அதிகரிக்கின்றன.

தற்போது உலக ஒழுங்கையே மாற்றியமைத்துக் கொண்டுவருகின்ற இந்தத் தொற்றுநோய் பற்றி உருவாகியிருக்கும் களங்க மனப்பாங்கு இந்த நோய்க்குச் சிகிச்சை அளிப்பதிலும், இந்த நோயைக் கட்டுப்படுத்துவதிலும் பல எதிர்மறை விளைவுகளையும், சவால்களையும் ஏற்படுத்துகின்றன. உதாரணமாக, ஏற்கனவே நோய் பரவியிருந்த இடங்களிலிருந்து வந்தோர், அல்லது அவ்வாறான இடங்களுக்குச் சென்று வந்தோரில் சிலர், அதுபற்றிய தகவல்களை வெளிவிடாது இருக்கிறார்கள். நோயின் ஆரம்ப அறிகுறிகள் ஏற்பட்டாலும், பலர் மருத்துவ உதவியை நாடாமல், அவற்றை மறைக்கப் பார்க்கின்றனர். வேறுசிலர் நோய்த்தொற்றுத் தொடர்பான தகவல் திரட்டல்களுக்கு ஒத்துழைக்க மறுக்கின்றனர். இன்னுமொரு சாரார் நோய்க்கட்டுப்பாடு தொடர்பான நடவடிக்கைகளுக்கு வெவ்வேறு முலாம்கள் பூசி அவற்றைத் திரித்துவிடுகின்றனர். இவை யாவும் எமது சமூகத்தில் இந்தத் தொற்றுநோயை முறையாகக் கட்டுப்படுத்தும் நடைமுறைகளை மேற்கொள்வதில் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன.

மறுதலையாக, கொவிட்19 தொடர்பாக இருக்கின்ற களங்க மனப்பாங்கினால், நோய்த்தொற்று ஏற்பட்டவர்களும், அவரது குடும்பத்தினரும், உற்றார் உறவினரும் நிறையப் பாதிப்புகளுக்கு உள்ளாகிறார்கள். அவர்களைப் பற்றிய தகவல்களும், கட்டுக் கதைகளும், வீண்பேச்சுகளும், அடையாளப்படுத்தல்களும், பொறுப்பற்ற அவசரமான அறிக்கையிடுதல்களும் அவர்கள் தொடர்பாக எதிர்மறை உணர்வுகளை ஏற்படுத்துகின்றன. எனவே, கொவிட் -19 தொற்றைத் திறனாற்றலுடன் கையாளுவதற்கு, அது தொடர்பாக ஏற்பட்டிருக்கின்ற களங்க மனப்பாங்கைக் குறைப்பதற்கான முயற்சிகளை நாம் ஒவ்வொரு மட்டத்திலும் உறுதிப்படுத்த வேண்டியிருக்கின்றது.

முக்கியமாக, ஒருவருக்குத் தொற்று ஏற்பட்டதெனச் சந்தேகித்தால் இடம்பெறுகின்ற நடைமுறைகள் பற்றிப் பொதுமக்களுக்குத் தெளிவான அறிவூட்டல்களை வழங்க வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்தினதும் அல்லது மாகாணத்தினதும் சுகாதாரத்துறைகள் இதனைக் கருத்தில் கொண்டு தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நோய்த் தொற்று இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்படும் பொழுது, நோய்த்தொற்று இருக்கிறதா என எவ்வாறு பரிசோதிக்கப்படுகிறது என்பது பற்றியும் அறிவூட்ட வேண்டும். நோய்த்தொற்று உறுதியானால் அடுத்து இடம்பெறுகின்ற நடைமுறைகள் பற்றியும், சிகிச்சையளித்தல் பற்றியும் மருத்துவத் துறையினர் வெளிப்படையான தகவல்களை வழங்க வேண்டும்.



அடுத்ததாக, தொற்று ஏற்பட்ட ஒருவரைக் கண்ணியமாகவும், மனிதாபிமானத்தோடும் நடத்த வேண்டியது முக்கியமானது. தொற்று ஏற்பட்ட ஒருவரின் குடும்பத்தவர், உறவினர், அயலவர் சுற்றத்தார் போன்ற, தொற்று ஏற்பட்டிருக்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளவர்களையும் நாம் மரியாதையோடு, அவர்களின் சுயகௌரவம் பாதிக்கப்படாதவாறு நடத்த வேண்டும். தொற்று ஏற்பட்ட ஒருவரை நாகரீகமான, மருத்துவ ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சொற்களைக் கொண்டு, உதாரணமாக, கொவிட்19 தொற்று ஏற்பட்டவர், அல்லது கொவிட்19 தொற்றினால் பாதிக்கப்பட்டவர் போன்ற சொற்களைக் கொண்டு, விளிப்பதுவும், அறிக்கையிடுவதும் முக்கியமானது.

அறிவூட்டல், ஆதரவளித்தல், மனதைப் பகிர்ந்து கொள்ளச் சந்தர்ப்பம் அளித்தல், இருக்கின்ற வசதியீனங்களுக்குள்ளும் கண்ணியமாக வாழ உதவுதல், தன்னம்பிக்கையும், சுய கணிப்பும் குறையாத வண்ணம் நிலைத்திருப்பதற்கு உதவுதல் என்பவற்றோடு, தேவைப்படுகின்ற பொழுதுகளில் பொருளாதார உதவி வழங்குதல் என, இந்த உளசமூக உதவிகள் அமைந்திருக்கும்.

ஊடகங்கள் கொவிட்19 தொற்றுத் தொடர்பான பரபரப்பான தகவல்களுக்குக் கொடுக்கும் முன்னுரிமையைவிட, அது தொடர்பான சரியான, பிந்திய, விஞ்ஞான ரீதியிலான தகவல்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது தேவையானது. குறிப்பாக கொவிட்19 தொற்றிலிருந்து மீண்டு வந்தவர்களின் கதைகள், அனுபவங்கள் என்பன வெளிவருகின்றபோது, ‘கொவிட்19’ தொடர்பாக இருக்கின்ற களங்க மனப்பாங்கு குறைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதுபோல் நாங்களும் இந்தத் தொற்றுநோய் தொடர்பாக எமக்குத் தேவைப்படும் தகவல்களைக் கண்டபடி பெறாது, உத்தியோகபூர்வமான, நம்பத்தகுந்த இடங்களிலிருந்து மட்டும் பெற்றுக் கொள்வோமேயானால். அது எமது பதகளிப்பைத் தணிப்பதுடன், இந்நோய் தொடர்பாக இருக்கின்ற களங்க மனப்பாங்கையும் குறைத்துவிடும். குறிப்பாக, இந்நோய் தொடர்பாக ஏற்பட்டிருக்கும் களங்க மனப்பாங்கைக் குறைப்பதற்கு நாம் ஒவ்வொரு கணமும் அறிவார்ந்து செயற்பட வேண்டும். நோய்க்குச் சிகிச்சையளிப்பதனையும், நோய் வராது தடுப்பதற்குரிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனையும் சுகாதாரத்துறை பார்த்துக் கொள்ளட்டும். நோயுற்றவர்களினதும், அவர்களது குடும்பத்தினரதும் கண்ணியத்தைக் காப்பதுவும், அவர்களுக்கு உதவி தேவைப்படுகின்ற பொழுதுகளில் அதனை வழங்குவதனையும் நாம் பொறுப்பெடுத்துக் கொள்வோம்.



இந்த நோய் எவரையும் குறிப்பாகத் தாக்கவும் இல்லை. விட்டு வைக்கவும் இல்லை. இதனைப் புரிந்து கொண்டு, நோய் தொடர்பான களங்கத்தை அதிகரிக்காத வண்ணம் நாம் பேசுவோம். எழுதுவோம். நடந்து கொள்வோம். சரியான தகவல்களைப் பெறுவோம். அரசாங்கத்தினுடைய அறிவுறுத்தல்களை முழுமனதோடு பின்பற்றுவோம். காலத்தின் கடமையைப் பொறுப்போடு ஆற்றுவோம். ■

# ஆறாம் ஆண்டு நினைவலைகள்



## செல்வி
## அருளானந்தம் இராதா

(முன்னாள் சிரேஸ்ட தாதிய போதனாசிரியர்.
யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரி,
யாழ்.போதனா வைத்தியசாலை)

**2020.03.30**



அன்னை மடியினிலே சித்திரை மாத முழுநிலாவில்
முத்தாக பிறந்து வெளிச்ச நிலாவாக வளர்ந்த எம்
இனையறா செல்வச்சகோதரியே
எங்கள் குடும்பத்திற்கு அருமையான
சோதரியாய் கிடைத்த வெளிச்ச வைரமே
கல்வியில் சிறந்து எம்மை பெருமிதமாக்கினாய்
இளமையில் சேர்த்த பெருமைகளால்
நற்புகழ் உமை நாடி வந்தனவே.
பள்ளிகள், பயிற்சிக் கல்லூரிகள், பல்கலைக்கழகமென
கால் பதித்த இடம் எல்லாம் தடம் பதித்து
உயர்ந்து நின்றீரே. விளையாட்டையும்
விஞ்ஞானத்தையும் அலங்கரித்த கோலம்
எங்கள் நெஞ்சம் மறந்திடுமா?
உமது சேவையால் பூரித்தவர் பலருண்டு.
புடம் போட்டு தாதியத்தைப் புகட்டிய எங்கள்
அருமை செல்வமே. எங்களுக்கும் நீர்
தாதியாய் இருந்த தருணங்கள் அத்தனையும்
மறவோம் அம்மா. உமது அமைதியான அழகு,
கனிவான பேச்சு, நடையில் நளினமான கம்பீரம்,
சேவையில் காட்டிய அர்ப்பணம் எல்லாவற்றிலும்
உமது கம்பீரம் முத்திரை பதித்து இருக்கையில்
ஷஷ்டி திதியில் அமைதியாக இறைவனடிடம்
சேர்ந்தீர் அம்மா.....

இராதா அம்மா உமைப்பிரிந்து வாடுகின்றோம்.
சிவபதியில் இன்பம் பெற இறைவனை
நெஞ்சார இறைஞ்சுகின்றோம்,
அன்பு நிறை செல்வமே....

**அன்னை மடியில்**
**பூவாக**
**1956.04. 25**

**ஆண்டவன் அடியில்**
**புகழாக**
**2014.04.05**

**திதி:வளர்பிறை**
**ஷஷ்டி**

### தங்கை இராதா!

ஆண்டு ஆறு எமை விட்டு நீர் மறைந்தாலும்
இன்றும் எம்முடன் வாழ்கின்றீர், வந்து போகின்றீர்,
ஈர விழிகள் உமைதேட கனவுலகில் வருகின்றீர்,
ஈரேழு ஜென்மங்க்ள கடந்தாலும்
உமது அன்பு நினைவுகள் எம்மை விட்டு அகலாது
நிலைத்து நிற்கும் எங்கள் கடைக்குட்டி ராதா செல்வமே
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி,

அன்பான ராதா செல்வமே ஆறாம் ஆண்டு
நினைவலைகலையும், உமது பிறந்த தின
நினைவலைகளையும் ஒன்றாகவே
இன்று நாம் விழிநீர் சிவப்பாக சொரிய
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி,

தேவாலய வீதி, நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

**சகோதரிகள்:**
**அக்கா : தேவி தங்கை : றதி**
**பெறாமகன் : ஷரிகரன்**
**பேரன் : லோஷீசன்**

## தேசத்தின் காப்பாளர்களுக்காக வழங்கப்படும் காப்புறுதி
## ஸ்ரீலங்கா இன்சூவரன்ஸ் விருஅபிமண்



# SLIC
# விருஅபிமண்

கோவிட் 19 பாதிப்பில் இருந்து தேசத்தை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் அரசாங்கத்துறை அனைத்து சுகாதாரப்பிரிவு ஊழியர்கள், முப்படையினர், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு தரப்பின் அதிகாரிகள், தபால் ஊழியர்கள், மாவட்ட மற்றும் பிரதேச சபைகளின் ஊழியர்கள், ஆகியோருக்கு 2020 ஆம் ஆண்டில் கோவிட் 19 நோய் தாக்கம் காரணமாக ஏதேனும் சந்தர்ப்பத்தில் உயிரிழப்பு ஏற்பட்டால் அவர்களது அன்பிற்குரியவர்களின் பாதுகாப்பிற்காக,

**தேசத்தின் பாதுகாவலன் இலவசமாக வழங்கும் ரூபா. 1.5 மில்லியன் வரையான காப்புறுதி அவர்களுக்கு கிட்டும்**

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
**0112 357357**
*நிபந்தனைகள் உண்டு.

SLIC
ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

# தாதியர், செவிலியர்களின் தொகையை 2030ஆம் ஆண்டில் அதிகரிக்கவேண்டும்

## தென்கிழக்காசிய நாடுகளுக்கு உலக சுகாதார ஸ்தாபனம் வலியுறுத்து

**கொழும்பு, ஏப்.9**

**2030ஆம் ஆண்டில் தென்கிழக்காசிய நாடுகள் தமது சுகாதாரக் கட்டமைப்புக்களை வலுப்படுத்திக்கொள்வதற்கு தாதிமார் மற்றும் செவிலியர்களின் எண்ணிக்கையை சுமார் 1.9 மில்லியனால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் வலியுறுத்தியுள்ளது.**

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது;

கொவிட் 19 க்கு எதிரான போராட்டத்தில் சுகாதார சேவையாளர்கள் முன்வரிசையில் நின்று அர்ப்பணிப்புடன் பணியாற்றிவரும் நிலையில், எதிர்வரும் 2030 ஆம் ஆண்டில் தமது சுகாதாரக் கட்டமைப்புக்களை வலுப்படுத்திக்கொள்வதற்கு தென்கிழக்காசிய நாடுகள் தாதிமார் மற்றும் செவிலியர்களின் எண்ணிக்கையை சுமார் 1.9 மில்லியன் எனும் இரு மடங்கு தொகையாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கர்ப்பிணித்தாய் பராமரிப்பு, பிறந்த குழந்தைப் பராமரிப்பு, மருத்துவ சுகாதார ஆலோசனை வழங்கல், சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் உள்ளிட்ட சுகாதாரத்துறை வலுவாக்கத்தின் மையப்புள்ளிகளாக தாதிமார் மற்றும் செவிலியர்களே உள்ளனர்.

எனவே அவர்களது எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், வலுவூட்டுவதற்கும் நடவடிக்கை எடுப்பது மிகவும் அவசியமாகும் என்றுள்ளது. (ப)

## பேருவளையில் 25,000 பேர் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஏப். 9

களுத்துறை மாவட்டம், பேருவளைப் பகுதியில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த சுமார் 25 ஆயிரம் பேர் வீடுகளுக்குள் தனிமைப்படுத்தலுக்குட்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அங்கு கொரோனா நோயாளர்கள் 15 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதனையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, அப்பகுதிகளைச் சேர்ந்த 900 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரி விக்கப்பட்டது. இதனிடையே தெஹிவளை, நெதிமால பகுதியிலுள்ள ஒருவர் நேற்று கொரோனா தாக்கி உயிரிழந்திருந்தார். அந்தப் பகுதியில் உள்ள 200 பேர் வீடுகளுக்குள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-22)

## சந்தேகமான நடமாட்டம்: கொரோனா நோயாளியா?

கொழும்பு, ஏப். 9

ஹற்றன், டிக்கோயாவில் சந்தேகத்துக்கிடமாக நடமாடித் திரிந்தார் என்று குற்றஞ்சாட்டப்படும் நபரிடம் இருமல் உட்பட கொரோனா தொற்றுக்கான அறிகுறிகள் காணப்பட்டதால், அவர் மடக்கிப்பிடிக்கப்பட்டு, டிக்கோயா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் அவர் கண்டி தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். மக்கள் வழங்கிய தகவலுக்கமைவாக பொலிஸாரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் இணைந்து அந்தநபரை நேற்றுமுன்தினமிரவு கைது செய்தனர். கடவத்த ஹியலபியன்வில பகுதியைச் சேர்ந்த 56 வயதுடையவரே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் கொழும்பு கம்பனி வீதியில், கூலி வேலை செய்பவர் என்று தெரியவந்துள்ளது. (த-114)

## கொமர்ஷல் வங்கியின் நடமாடும் சேவை இன்று

யாழ்ப்பாணம், ஏப்.9

கொமர்ஷல் வங்கியின் மானிப்பாய் கிளையின் நடமாடும் வங்கிச்சேவை மானிப்பாய் மற்றும் ஆனைக்கோட்டை பிரதேசத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெறும். இந்த நடமாடும் சேவையில் தன்னியக்கப் பணப்பரிமாற்ற சேவை மற்றும் கருமபீட கொடுக்கல் - வாங்கல் சேவைகளை குறிப்பிட்ட இடங்களில் வாடிக்கையாளர் பெற்றுக் கொள்ளலாம்.

ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியில் காலை 8.30 மணி தொடக்கம் முற்பகல் 10 மணி வரையும், நவாலி முருகமூர்த்தி கோவிலில் முற்பகல் 10.15 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணி வரையும், சாவற்கட்டு பகுதியில் முற்பகல் 11.45 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரையும், சங்குவேலி பகுதியில் பிற்பகல் 2 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரையும் இந்த சேவை இடம்பெறும். (க)

## தமிழகவாசி இணுவிலில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 9

தலையில் இருந்த கட்டி காரணமாக உயிரிழந்தார் என்று கூறி தமிழகத்தைச் சேர்ந்த ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் இரவு யாழ். போதனா மருத்துவமனைக்குகொண்டுவரப்பட்டுள்ளது. இணுவில் கிழக்கில் தங்கியிருந்தவரான, தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த மணி வீரபுத்திரன் (வயது- 36) என்ற குடும்பத்தலைவரே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-20)

# நீராவியடி விகாரையில் ஆணின் சடலம் மீட்பு

முல்லைத்தீவு, ஏப்.9

முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளவில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரையிர் கடமையாற்றியவரது சடலம் விகாரை வளாகத்தில் மீட்கப்பட்டுள்ளது.

ஆலய வளாகத்தில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட நாயாறு குருகந்த ரஜமகா விகாரையில் கடந்த திங்கட்கிழமை சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் , விகாரையில் உள்ள பௌத்த துறவியோடு, பணிபுரிந்துள்ளார்.

இரவு நித்திரைக்குச் சென்றவர் எழுந்து வராத நிலையில், அங்கு இருந்தவர்கள் சென்று பார்த்த போது , அவர் உயிரிழந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி உள்ளிட்டவர்கள் சம்பவ இடத்தில் சடலத்தைப் பார்வையிட்டனர். உயிரிழந்தவருடைய உறவினர்கள் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக தெரிவித்ததன் அடிப்படையில், சடலம் மருத்துவ பரிசோதனைகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டது.

உயிரிழந்தவர் 2016 ஆம் ஆண்டு முதல் விகாரையில் கடமையாற்றி வந்த ஜனகபுரப் பகுதியை சேர்ந்த கமகே நிமால் கருணாரத்ன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)


## மரண அறிவித்தல்



**அருட்சகோதரி**
**மரிய றோசா கபிரியேல்பிள்ளை தி.கு**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாக கொண்ட யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்த அருட்சகோதரி மரிய றோசா கபிரியேல் பிள்ளை (08.04.2020) புதன்கிழமை இறைபதம் இணைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிப் பயண செபவழிபாடும் ஆசீர்வாதமும் (09.04.2020) வியாழக்கிழமை மு.ப. 08.00 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் நடைப்பெற்ற பின்னர். இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்
மாகாணத் தலைவி.

0772785824, 0776866699

# பாதிப்பு 1,500,000 உயிரிழப்பு 87,000

வுகான், ஏப். 9
கொரோனாவால் உலக அளவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 87 ஆயிரமாக அதிகரித்தது. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 15 லட்சமாக அதிகரித்தது.
சீனாவின் வுகான் மாநகரில் தோற்றம்பெற்ற கொரோனா, அமெரிக்கா, இத்தாலி, ஸ்பெய்ன், பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி, கனடா ஆகிய பொருளாதாரச் சக்தி படைத்த நாடுகளை தற்போது அதிகம் பாதித்துள்ளது. இந்த வைரஸால் மேற்குறித்த நாடுகளில் இருந்து மட்டும் தினமும் பல்லாயிரம் மக்கள் உயிரிழக்கின்றனர். இந்த நிலையில் நேற்று நள்ளிரவு 12 மணி வரையிலான நிலவரத்தின்படி கொரோனாவால் உலக அளவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 87 ஆயிரமாக அதிகரித்தது. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 15 லட்சமாக அதிகரித்தது. (ம)

# யாழ். மாவட்டத்தில் ஊரடங்கு தொடரும்

கொழும்பு, ஏப்.9
யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம் மற்றும் கண்டி ஆகிய 6 மாவட்டங்களில் மறு அறிவித்தல் வரை பொலிஸ் ஊரங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என்று ஜனாதிபதி விசேட செயலணி இன்று அறிவித்துள்ளது,

ஏனைய 19 மாவட்டங்களில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம்,இன்று வியாழக்கிழமை காலை 6 மணிக்கு தற்காலிகமாகத் தளர்த்தப்படவுள்ளது. பின்னர் மாலை 4 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.
அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய பணிகளுக்காக மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது எனவும் ஜனாதிபதி விசேட செயலணி தெரிவித்துள்ளது. (ஏ-22)

## கொரோனா காவு...

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 48 வயதான ஆண் ஒருவர் நேற்று மாலை உயிரிழந்துள்ளார் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.
களுத்துறை, மக்கொனையைச் சேர்ந்த இவர் பிரபல மாணிக்கக்கல் வியாபாரியாவார். இவர் அண்மையில் ஜேர்மனுக்குச் சுற்றுலா சென்று நாடு திரும்பியவர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.
உயிரிழந்த நபர் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார் என்றும் அவர் மேலும் கூறினார்.
தற்போது கொரோனா தொற்றால் இலங்கையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 7ஆக அதிகரித்துள்ளது.
உயிரிழந்த 7 பேரும் ஆண்களாவர்.
அதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸின் வீரியம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது என்றும், இது எப்போது தணியும் என்று கணிக்க முடியாத நிலையில் உள்ளது என்றும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கவலையுடன் தெரிவித்தார். (ஏ-22,44)

# வவுனியாவில் மினி சூறாவளி

வவுனியா,ஏப். 9
வவுனியாவில் நேற்று வீசிய மினி சூறாவளியால் பத்து வீடுகள் மற்றும் பாடசாலைக் கட்டடம் என்பன பெருமளவில் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
வவுனியாவில் சில நாள்களாக வெப்பமான காலநிலை நிலவிவந்தது.
பின்னர் இரு நாள்களாக இடிமின்னலுடன் கூடிய மழை பெய்துவருகின்றது.
இந்தநிலையில் வவுனியா, சுந்தரபுரம் மற்றும் மணிபுரம் பகுதியில் நேற்று மினி சூறாவளி காரணமாக பத்து வீடுகளின் கூரைகள் கடுமையாகச் சேதமடைந்தன. சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலத்தின் பிரதான கட்டடங்களின் கூரைத்தகடுகளும் தூக்கிவீசப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
இதேவளை வவுனியா வைரவப்புளியங்குளம் வைரவர் கோவில் வீதியில் காணப்பட்ட பழமை வாய்ந்த மரமொன்றும்முறிந்து வீழ்ந்தது. அதனால் வீதிப் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருந்தது. (த110)

# 15 மில்லியன் முட்டைகள் தேக்கம்

கொழும்பு,ஏப்.9
நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட நிலையில் கோழி முட்டை விற்பனை பெரும் வீழ்ச்சியை சந்தித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இதன் காரணமாக சுமார் 15 மில்லியன் முட்டைகள் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
குறித்த முட்டைகளைச் சேமித்து வைத்துள்ளதாக விலங்கு உற்பத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.
நாடளாவிய ரீதியில் தீவிரமடைந்துள்ள கொரோனா வைரஸ் பரவல் காரணமாக, ஊரடங்குச் சட்டம்அமுல்படுத்தப்பட்டுள்ளது.
இதனால் நாளாந்தம் உற்பத்தியாகும் முட்டைகளில் நூற்றுக்கு 10 வீதம் மாத்திரமே விற்பனை செய்யப்படுகிறது என்று திணைக்கள இயக்குனர் சுனில் சில்வா தெரிவித்துள்ளார்.
இவ்வாறு சேமிக்கப்பட்ட முட்டைகளில் 11 மில்லியன் கோழி முட்டைகள் வட மேல் மாகாண உற்பத்தியாளர்களுக்கு சொந்தமானது என்றும் அவர் தெரிவித்தார். (க114)

## மஸ்தானுக்கு...

டிந்தது.
சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.
புத்தளத்தில் கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்ட ஒருவர் கடந்த 18 ஆம் திகதி மன்னார் தாராபுரம் கிராமத்தின் இறப்பு வீடொன்றுக்குச் சென்றார் எனவும், அவர் அங்கு வந்திருந்த முன்னாள் எம்.பி. காதர் மஸ்தான் மற்றும் இதர பலருடன் நீண்ட நேரம் உரையாடியிருந்தார் எனவும் கண்டறியப்பட்டது. இதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. (த-22)
( இது தொடர்பான இன்னொரு செய்தி உள்ளே)

## இளைஞனின்...

உடையார் கட்டு தெற்கு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சுதாகரன் சுவீகன்(வயது 19) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
ஊரடங்குச் சட்டம் காரணமாக வர்த்தக நிலையத்தின் களஞ்சியமாகப் பயன்படுத்தப்பட்டுவந்த வீட்டில் குறித்த இளைஞர் தங்கியிருந்துள்ளார். இந்த நிலையில் நேற்றுக் காலை பொருள்களை எடுப்பதற்காகச் சென்ற மற்றொரு பணியாளர் இளைஞர் தூக்கில் தொங்குவதை அவதானித்துப் பொலிஸாருக்குத் தெரிவித்தார். அங்கு சென்ற பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். சடலத்தை மீட்டு யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சேர்த்தனர். காதல் விவகாரம் இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை நடத்தினார். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-27,26)

## 14 நாள்...

துள்ளது. அதையடுத்து இவர் சிகிச்சைக்காக வெலிக்கந்த ஆதார வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.
கட்டார் சென்று திரும்பிய பின்னர் இவர் தனிமைப்படுத்தல் நிலையத்துக்குச் சென்று திரும்பி வந்தவர் எனவும், 14 நாள்கள் கழிந்த பின்னரே இவருக்குத் தொற்று இருப்பது தெரியவந்துள்ளது எனவும் அறியமுடிந்தது.
தனிமைப்படுத்தல் முடிந்து வீடு திரும்பிய இவர் பலருடன் பழகி இருப்பதால் அது தொடர்பில் சுகாதாரக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது. இவருடன் கட்டார் சென்று திரும்பிய மேலும் 7 பேர் தொடர்பிலும் ஆராயப்படுகின்றது. (ஏ-22)

## உயர் நீதிமன்ற...

வது தொடர்பாகத் தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த 30 ஆம் திகதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது.
அந்தக் கடிதத்துக்குப் பதில் வழங்கி கடந்த 6ஆம் திகதி ஒப்பமிட்டு அனுப்பிய கடிதத்திலேயே ஜனாதிபதியின் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அந்தக் கடிதத்தில் உள்ளதாவது
அரசமைப்பின் 129ஆம் சரத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்துக்கு அமைய நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 24 3இன் பிரகாரம் தேர்தலை 14 நாள்களுக்குக் குறையாமல் ஒத்திவைக்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு உள்ளது. அதே நேரம் 15ஆம் நாளில் இருந்து தேர்தலை நடத்தும் அதிகாரமும் உண்டு.
நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் உயர் நீதிமன்றை நாட வேண்டிய அவசியம் இல்லை என்றே ஆலோசனை வழங்கப்படுகின்றது. தேர்தல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரிய அதிகாரம் மற்றும் சட்ட ஏற்பாட்டின் நான் தலையிட விரும்பவில்லை என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
தற்போது நாட்டில் கொரோனா தொற்றுத் தீவிரமடைந்து வரும் நிலையில் நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டும் என்று பிரதான எதிர்க் கட்சியும், ஏனைய அரசியல் கட்சிகளும் கோரிக்கை விடுத்து வருகின்றன. ஆனால் அரசு நாடாளுமன்றத்தைக் கூட்டுவதில் அவதானம் செலுத்தாது, பொதுத் தேர்தலை நடத்துவதில் தீவிரமாக உள்ளது.
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். தற்போது அவரது செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தின்படி, தேர்தலை எதிர்வரும் மே மாத இறுதிக்குள் நடத்துவதற்கு அரசு திட்டமிடுகின்றது என்பது தெளிவாகின்றது. (ஏ-க-105)

## விசேட...

பெறுகிறது என்று அரச புலனாய்வுத் துறையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து விசேட அதிரடிப்படையினர் கஞ்சாக்காரர்களைப் பிடிக்கத் திட்டமிட்டனர். பொதுமகன் போல வேடமிட்ட விசேட அதிரடிப்படையினர் கஞ்சா வியாபாரி என்று கூறப்பட்டவரிடம் தொடர்புகொண்டு கஞ்சா கேட்டுள்ளனர். அவரும் அதை அதிரடிப் படையினருக்கு விற்க முனைந்தபோது, அவர் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டார்.
பருத்தித்துறை வியாபாரி மூலை பகுதியில் வைத்து 8 கிலோ கஞ்சா அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்று விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர். 30 வயதுடைய குறித்த நபர் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். கைப்பற்றப்பட்ட கஞ்சாவும் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டது. மேலதிக விசாரணைகளைப் பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (பு-26, 6)

# பெருந்தோட்ட உற்பத்தியை முன்னெடுக்க அரசு முஸ்தீபு

கொழும்பு, ஏப்.9

**பெருந்தோட்டத் துறை மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு பெருந்தோட்ட உற்பத்திகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்வதற்கு இடமளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தேசியப் பொருளாதாரத்துடன் தொடர்புடைய பெரும்பாலான மக்கள் பெருந்தோட்டத்துறை உற்பத்திகளுடன் தொடர்புடையவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களது வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு பெருந்தோட்ட உற்பத்திகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு இடமளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கமைய தேயிலை கொண்டுசெல்லல் நடவடிக்கை இலங்கை தேயிலைச் சபையின் ஆலோசனைகளுக்கு அமைய முன்னெடுக்கப்படவுள்ளது. இதேபோன்று தென்னை, இறப்பர், மிளகு போன்றவை தொடர்பிலும் அவற்றின் உரிய திணைக்களங்களால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பெருந்தோட்டக் கைதொழில் மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சு, ஜனாதிபதி செயலணி, பொலிஸ் திணைக்களம் மற்றும் சுகாதார அமைச்சு என்பன இணைந்து ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலிருக்கும் போது முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றித் தீர்மானித்துள்ளன.

இது தொடர்பில் இலங்கைத் தேயிலைச் சபையின் தலைவர் ஜயம்பதி மொல்லிகொடவை 0777668088 என்ற இலக்கத்துக்கு அழைத்து தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ள முடியும். அதே போன்று இலங்கைத் தேயிலைச் சபையின் ஆணையாளர் ஜயந்த எதிரிசிங்கவை 0714491618 என்ற இலக்கத்துடனும், தென்னை உற்பத்தி அதிகார சபைத் தலைவர் ஜயந்த விக்கிரமசிங்கவை, 0772289444 என்ற இலக்கத்துடனும், இலங்கை சீனி உற்பத்தி அதிகாரசபைத் தலைவர் ஜானக நிமல சந்திரவை 077875888 என்ற இலக்கத்துடனும், உற்பத்தி அமைப்பின் தலைவர் ரத்நாயக்கவை 0773895602 என்ற இலக்கத்துடனும், இறப்பர் உற்பத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மங்கல திஸ்ஸவை 0718506462 என்ற இலக்கத்துடனும், இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகம் சஞ்சயவை 077795510 என்ற இலக்கத்துடனும் தொடர்பு கொண்டு உரிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)



மருத்துவமனைக்கென

## 50 உடற்கவச அங்கிகள் படையினர் வழங்கினர்

முல்லைத்தீவு, ஏப். 9

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மருத்துவத் துறைக்கென 50 உடற்கவச அங்கிகள் வழங்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ளும் நோக்கில் மாவட்ட 59 ஆவது படைப் பிரிவினரின் ஏற்பாட்டில் இவை அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

59 ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி மேஜர் ஜென்ரல் பெரேரா முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் பணிப்பாளரிடம் அவற்றை வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-19)



## கனகதுர்க்கை ஆலயத்தால் மாணவருக்கு உதவிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.9

யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி மாணவர்களின் குடும்பங்களுக்கு லண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தினரின் உதவியுடன் உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன.

பாடசாலை மாணவர்களின் 70 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்று முன் தினம் வழங்கப்பட்டன.

அரிசி, மா, சோயா, பருப்பு, உருளைக்கிழங்கு உள்ளிட்ட மரக்கறிகளும் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## உணவில்லையேல் உடனடியாக மாவட்டச் செயலரை நாடுங்கள்

கொரோனாத் தாக்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கால், யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை உணவுக்கு ஏற்பாடுகள் ஏதுமின்றி சிரமப்படுபவர்கள் உடன் மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் அறிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் கொரோனா அச்சம் காரணமாக நிலவும் ஊரடங்குச் சட்டத்தால், தொழில் பாதிப்படைந்த தினக்கூலியாள்களில் எவராவது வருமானம் இன்றியோ, அல்லது உண்ண உணவின்றியோ பட்டினியை எதிர்நோக்கினால் உடனடியாக மாவட்டச் செயலாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்ள முடியும். இவ்வாறு மாவட்டச் செயலாளரை நாடவிரும்பும் மக்கள் மாவட்டச் செயலகத்துடன் நேரடியாகவோ, தொலைபேசியிலாகவோ தொடர்பு கொண்டு விவரத்தை வழங்கினால் உடனடியாக உண்மைத் தன்மை உறுதி செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்டச்செயலாளர் மேலும் தெரிவித்தார். (ப-105)



*இளவாலை திருமறைக் கலாமன்றத்தால் சிறுவர் கலைக்கூடத்தில் அங்கம் வகிக்கும் 25 சிறார்களின் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன. (ஐ-23)*

# ஆஸ்திரேலியா - இலங்கை மாணவர் கல்வி நிதியத்தால் உணவுப்பொதி

யாழ்ப்பாணம், ஏப்.9

அவுஸ்திரேலியாவிலிருந்து இயங்கி வரும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் ஏற்பாட்டில் வவுனியா, மாலையகம், யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

வவுனியா மாவட்டத்துக்கான உணவுப் பொருள்கள், நீண்ட கால தொடர்பாளர் அமைப்பான நலிவுற்ற சமூக அபிவிருத்திக்கான தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் பணிமனையில் அதன் தலைவர் த. கணேஷ் தலைமையில் வழங்கப்பட்டன.

அரிசி, கோதுமை மா, பருப்பு, சீனி, தேயிலை, சோயா, கடலை, சமபோசா முதலான அத்தியாவசியப் பொருள்கள் பொதிசெய்யப்பட்டு ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்கப்பட்டன. இதன்போது, கொரனோ வைரஸ் தாக்கம் தொடர்பாக தாய்மாருக்கு விழிப்புணர்வு விளக்கமும் அளிக்கப்பட்டது.

மலையகத்தில் இயங்கும் தன்னார்வத் தொண்டியக்கமான மலையக சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம் மலையகத்தைச் சேர்ந்த வறிய குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.



நுவரெலியா மாவட்டத்தில் வர்த்தக அன்பர் ஒருவரின் அனுசரணையுடன் கிடைக்கப்பெற்ற உலர் உணவுப்பொதிகள் மலையக சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் கே. அரியமுத்து தலைமையில் வழங்கிவைக்கப்பட்டன. அங்கு சுமார் ஆயிரத்து 500 வறிய குடும்பத்தினருக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணம் - அரியாலை, கண்டிவீதியில் அமைந்த யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையத்தால் கடந்த சில நாள்களாக யாழ். மாவட்டத்தில் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உதவிகளைப்பெற்றுவரும் மாணவர்களின் குடும்பங்களுக்கு நேரடியாகச் சென்று உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

அத்துடன், தொடரும் வைரஸ் அச்சுறுத்தல் தொடர்பாக விழிப்புணர்வை வழங்கும் அறிவுறுத்தல்களும் மாணவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. (ஐ)

# கொரோனாவால் பெரும் நன்மை!

புதுடெல்லி, ஏப். 9
கொரோனா ஊரடங்கு காரணமாக தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதால் கங்கையாற்று நீரின் தரம் முன்பைவிட 50 சதவீதம் மேம்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த சமூக இடைவெளி அவசியம் என்பதால் பிரதமர் மோடியின் அறிவிப்பின்படி, நாடுமுழுவதும் 21 நாட்கள் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் பிரச்சினையால் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதாலும், வாகனப் போக்குவரத்து வெகுவாகக் குறைந்துள்ளதாலும் காற்று மாசு அதிக அளவில் குறைந்துள்ளது கங்கை, யமுனை ஆறுகளின் கரைகளில் உள்ள தொழிற்சாலைகளில் இருந்து பெருமளவு கழிவுகள் ஆறுகளில் திறந்து விட்டப்படுவது வாடிக்கை. இதனால் ஆறுகள் பெருமளவில் மோசடைந்து வந்தன.

தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதால் அவற்றில் இருந்து கழிவுகள் வெளியேறி ஆற்றில் கலப்பது முற்றிலும் நின்றுபோனது. இதனால் கான்பூரில் கங்கையாற்று நீரின் தரம் முன்பைவிட 50 சதவீதம் மேம்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)





# இழுத்து மூடப்பட்டது ரஷ்ய- சீன எல்லை!

மொஸ்கோ, ஏப். 9
ரஷ்யாவில் இருந்து விளாடிவோஸ்டோக் எல்லை வழியாக சீனாவுக்குள் நுழைந்த 59 பேருக்கு கொரோனா இருந்ததை அடுத்து, அந்த எல்லையை தற்காலிகமாக மூடியது சீனா.

'நாளை முதல் (இன்றிலிருந்து) ரஷ்ய விமானங்களில் விளாடிவோஸ்டோக் பகுதிக்கு வந்திறங்கும் சீனர்கள், 14 நாட்கள் தனிமை முகாம்களில் அடைக்கப்படுவார்கள். சிறப்பு அனுமதி பெற்றுள்ள சீனர்கள் மட்டுமே விளாடிவோஸ்டோக் பகுதியில் நடமாட முடியும் என்று சீன தூதரகம் கூறியுள்ளது. (ம)

# கொரோனாவால் இறந்தோரை வீதிகளில் வீசுகின்ற நிலை!

### ஈக்வடோரில் துயரம்

குயிட்டோ, ஏப். 9
ஈக்வடார் நாட்டில் கொரோனாவால் இறந்தவர்களின் உடல்களை அவர்களது உறவினர்களே வீதிகளில் வீசும் அவல நிலை ஏற்பட்டுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான ஈக்வடாரில் கடந்த சில நாட்களாக கொரோனா வைரஸ் தொற்றுக்கு ஏராளமானோர் பலியாகி வருகின்றனர். குறிப்பாக, அந்த நாட்டின் துறைமுக நகரான குய்யாகு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நகரில் மட்டும் இதுவரை 150க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். கொரோனா தொற்றால் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் வீடுகளை விட்டு வெளியேற இறுக்கமான தடை விதிக்கப்பட்டு இருக்கிறது. இறந்தவர்களை முறைப்படி அடக்கம் செய்யவும் முடியவில்லை. இதனாலேயே சடலங்களை வீதிகளில் கைவிட்டுச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. (ம)

# இத்தாலியில் 94 மருத்துவர்களும் 26 தாதியரும் பலி!

உரோம், ஏப். 9
கொரோனா வைரஸ் தொற்றால் ஏப்ரல் 7ஆம் திகதிவரை இத்தாலியில் 94 வைத்தியர்களும், 26 தாதிய உத்தியோகத்தர்களும் பலியாகியுள்ளனர் என்று அந்நாட்டு மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது. வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட சுகாதார துறையைச் சார்ந்த 12 ஆயிரத்து 861 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறப்பட்டுள்ளது.

இத்தாலியில் கொரோனா வைரஸால் ஒரு லட்சத்து 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதுடன், 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். (ம-44)

# சுகாதாரத்துக்கான நிதி நிறுத்தப்படும்

## உலக சுகாதார அமைப்புக்கு அமெரிக்க அதிபர் மிரட்டல்

**வொஷிங்டன், ஏப். 9**

**உலக சுகாதார அமைப்பு சீனாவுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ள அமெரிக்க அதிபர் ட்ரம்ப், அந்த அமைப்புக்கான நிதி நிறுத்தப்படும் என்று எச்சரிக்கையும் விடுத்தார்.**



அமெரிக்காவில் கொரோனா வைரஸ் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு கோரத் தாண்டவம் ஆடிவருகிறது. 4 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவில் மட்டும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14 ஆயிரத்தை எட்டியுள்ளது.

ஆரம்ப காலத்தில் கொரோனாவின் தீவிரத்தை குறைத்து மதிப்பிட்ட அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், வைரஸ் அசுர வேகத்தில் பரவத் தொடங்கியதும் சுகாதார நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்தினார்.

அதேசமயம் கொரோனா வைரஸ் மனிதர்கள் மூலம் மனிதர்களுக்கு பரவும் என்ற விஷயத்தை சீனா மறைத்துவிட்டதாகவும், உலக சுகாதார அமைப்பு சீனாவுக்கு ஆதரவாக செயல்படுவதாகவும் ட்ரம்ப் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறார்.

இந்த நிலையில் வெள்ளை மாளிகையில் அவர் நேற்றுத் தெரிவித்ததாவது:

'உலக சுகாதார அமைப்பு அமெரிக்காவிடமிருந்து ஏராளமான பணத்தைப் பெறுகிறது. பயணத் தடையை நான் விதித்த சமயத்தில், அவர்கள் விமர்சித்தனர். பயணத் தடைக்கு உடன்படவும் இல்லை. நிறைய விஷயங்களில் அவர்கள் தவறாகவே பேசியிருகிறார்கள். அவர்கள் சீனாவுக்கு ஆதரவாக செயற்படுகின்றனர். உலக சுகாதார அமைப்புக்கு வழங்கும் நிதியை நாங்கள் நிறுத்தப் போகிறோம்'- என்றார். (ம)

# அமெ. மிரட்டலுக்கு பணிந்தது இந்தியா

வொஷிங்டன், ஏப். 9
கொரோனாவுக்கு எதிராக அமெரிக்கா பெரிதும் நம்பும் குளோரகுயின் மாத்திரைகளை இந்தியா பெரும் எண்ணிக்கையில் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

குளோரகுயின் மாத்திரைகள்தான் கொரோனாவுக்கு எதிராக தற்காலிகத் தீர்வு என்று அமெரிக்கா நம்புகின்றது. இந்த மாத்திரைகளை உலக அளவில் அதிகம் உற்பத்தி செய்வது இந்தியாதான். ஆனால் கொரோனா பாதிப்புக் காரணமாக இந்தியாவிலேயே இந்த மாத்திரைகளுக்குப் பெரும் கேள்வி உள்ளதால் குளோரகுயின்களை ஏற்றுமதி செய்ய மோடி தடை விதித்தார் இந்த நிலையில் நேற்றுமுன்தினம் பேசிய ட்ரம்ப், 'இந்தியாவிடம் ஏராளமான குளோரகுயின் மாத்திரைகளைக் கோரியுள்ளோம். எமது கோரிக்கையை இந்தியா நிராகரித்தால் பெரியதொரு பதிலடியைச் சந்திக்க நேரிடும்' என்று எச்சரித்தார். இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்ட 24 மணிநேரத்திலேயே 2.90 கோடி குளோரகுயின் மாத்திரைகளை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்ய உடன்பட்டுள்ளது இந்தியா.

இது தொடர்பில் நேற்று ட்ரம்ப் தெரிவித்ததாவது: 'லட்சக்கணக்கான குளோரோகுயின் மாத்திரைகளை நாங்கள் வாங்கியிருக்கிறோம். 2.90 கோடிக்கும் அதிகமான மாத்திரைகள் வாங்கப்பட்டுள்ளன. நான் பிரதமர் மோடியிடம் பேசினேன். இந்தியாவிலிருந்து மிகப்பெரிய அளவில் ஹைட்ராக்ஸி குளோரோகுயின் மாத்திரைகள் அமெரிக்காவுக்கு வருகின்றன. நீங்கள் மாத்திரைகளை ஏற்றுமதி செய்ய அனுமதித்ததால் பெரிய மனிதர் என்றேன். உண்மையில் மோடி பெரிய மனிதர்தான். இந்தியாவுக்கும் அந்த மாத்திரை தேவைப்பட்டதால் அவர்கள் அந்த மாத்திரை ஏற்றுமதியைத் தடுத்து வைத்திருந்தார்கள். அதில் தவறொன்றும் இல்லை' - என்றார். (ம)

# கோலி என்றால் ஆஸிக்கு பயம்


*கிளார்க் விளாசல்*

புதுடெல்லி, ஏப். 9
விராட் கோலியையும் அவர் தலைமையிலான ஆஸ்திரேலிய வீரர்களையும் சீண்டுவதற்கு ஆஸ்திரேலிய வீரர்கள் அச்சத்துடன் நடந்து கொண்டனர் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் மைக்கல் கிளார்க்.

இது தொடர்பில் கிளார்க் மேலும் தெரிவித்ததாவது:
கிரிக்கெட் ஆட்டத்தின் நிதிநிலைமைகளைப் பொறுத்தவரை இந்தியா எப்படி பலம் பொருந்தியது என்பதை அனைவரும் அறிவார்கள். சர்வதேச கிரிக்கெட்டிலும் சரி உள்நாட்டில் ஐ.பி.எல் தொடரிலும் சரி. ஆஸ்திரேலிய அணி, சிலபல வேளைகளில் கோலியையும் அவர் தலைமையிலான இந்திய அணியையும் எதிர்த்து வார்த்தை மோதலில் ஈடுபடுவதற்கு அச்சத்துடன் நடந்துகொண்டது. ஏனைய அணிகளும் அவ்வாறான போக்கைக் கடைப்பிடித்தன. இதற்கு ஐ.பி.எல் தொடரில் கிடைக்கும் பணமழை ஒரு காரணம்.

வீரர்கள் என்ன நினைத்தார்கள் என்றால்: நான் கோலியை ஸ்லெட்ஜ் (வம்பிழுக்க) செய்யப் போவதில்லை. என்னை அவர் பெங்களூரு அணிக்கு எடுக்க வேண்டும். 6 வாரங்களுக்கு நான் 1 மில்லியன் அமெரிக்க டாலர்களை சம்பாதிக்க வேண்டும், என்றே வீரர்கள் பலரும் நினைத்தனர். இந்த மாதிரி காலக்கட்டத்தில்தான் ஆஸ்திரேலிய அணி மென்மையாகப் போனது, அதன் வழக்கமான ஆக்ரோஷத் தன்மை காணாமல் போனது – என்றார். (ம)





# கோலியின் ஆதிக்கத்துக்கு முடிவுகட்டினார் ஸ்ரோக்ஸ்!

லண்டன், ஏப். 9
கிரிக்கெட்டின் பைபிள் என்று கருதப்படும் விஸ்டனின் உலகின் முன்னணி கிரிக்கெட் வீரராக பென் ஸ்டோக்ஸ் தேர்வு செய்யப்பட்டார். இதன் மூலம் இந்திய அணித் தலைவர் விராட் கோலியின் 3 ஆண்டு கால மகுடத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

2020 விஸ்டன் கிரிக்கெட்டர்ஸ் அல்மனாக், பென் ஸ்டோக்ஸை உலகின் சிறந்த வீரர் என்று அறிவித்துள்ளது. 2005ஆம் ஆண்டில் ஆண்ட்ரூ பிளிண்டாப் இந்த விருதை அலங்கரித்த பிறகு இன்னொரு இங்கிலாந்து வீரராக பென் ஸ்டோக்ஸ் தற்போது இந்த விருதை அலங்கரித்துள்ளார்.

நியூஸிலாந்துக்கு எதிராக உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் மிகப்பெரிய இன்னிங்ஸை விளையாடி கோப்பையை வெல்லக் காரணமாக இருந்தார் பென் ஸ்டோக்ஸ். அதே போல் ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 3ஆவது இன்னிங்சில் பிரையன் லாராவை நினைவூட்டும் விதமாக 135 நாட் அவுட் என்று மிகப்பெரிய டெஸ்ட் இன்னிங்ஸில் இங்கிலாந்தை வெற்றிபெறச் செய்தார்.

இது தொடர்பில் விஸ்டன் தெரிவித்ததாவது, 'வாழ்நாள் சாதனை இன்னிங்ஸை சில வாரங்கள் இடைவெளியில் இரு முறை நிகழ்த்தி விட்டார் பென் ஸ்டோக்ஸ். முதலில் உலகக்கோப்பையில் மிகப் பெரிய திறமையுடனும் கொஞ்சம் அதிர்ஷ்டத்துடனும் இலக்கை விரட்டி வெற்றிபெறச் செய்தார். பின்னர் ஆஷஸ் தொடரில் ஹெடிங்லீயில் 3ஆவது டெஸ்ட் போட்டியில் மிகப்பெரிய இன்னிங்ஸ் ஒன்றை விளையாடினார். வெள்ளைப் பந்தாக இருந்தாலும் சிகப்புப் பந்தாக இருந்தாலும் இயற்கையின் ஒரு சக்தி பென் ஸ்டோக்ஸ்' என்றது. (ம)




# டோனியின் தலைமையின் கீழ் நன்றாக விளையாடினார் யுவி!

*நெக்ரா மறுத்துரைப்பு*

புதுடெல்லி, ஏப். 9
டோனி தனது தலைமைத்துவத்தின் கீழ் தனக்குப் பெரிய ஆதரவை அளிக்கவில்லை என்று யுவராஜ் சிங் குற்றம் சுமத்தியிருந்த நிலையில், என்னைப் பொறுத்தவரை டோனியின் தலைமைத்துவத்தின் கீழ்தான் யுவராஜ் சிங் நன்றாக விளையாடினார் என்று நெக்ரா தெரிவித்துள்ளார்.

பிரபல இணையத்தளம் ஒன்றுக்கு இது தொடர்பில் நெக்ரா மேலும் தெரிவித்ததாவது:
டோனியின் தலைமைத்துவத்தின் கீழ்தான் யுவராஜ் நன்றாக விளையாடினார். கங்குலியைத் தெரிவு செய்வது அவரது தனிப்பட்ட விருப்பம். ஆனால் புள்ளி விவரங்கள் டோனி என்றே சொல்கின்றன. இரு தரப்புத் தொடர்கள் தொடக்கம் உலகக் கிண்ணம் வரையில் டோனியின் தலைமையின் கீழ் தான் யுவராஜ் வெளுத்துக்கட்டினார் – என்றார். (ம)




# ரியல் மட்ரிட் அணியில் மீண்டும் ரொனால்டோ?

மட்ரிட், ஏப். 9
போர்த்துக்கல் தேசிய கால்பந்தாட்ட அணியின் நட்சத்திர வீரரும், தலைவருமான ரொனால்டோ, கழகத்தைப் பொறுத்தமட்டில் மீண்டும் ரியல் மட்ரிட் கழகத்துக்காக விளையாட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று சொல்லப்படுகின்றது.

உலகின் தலைசிறந்த கால்பந்து வீரர்களில் ஒருவர் ரொனால்டோ. இவர் கடந்த பல வருடங்களாக ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் அணிக்காக விளையாடி வந்தார். அந்த அணிக்காக 438 போட்டிகளில் விளையாடி 450 கோல்கள் அடித்துள்ளார். 100 மில்லியன் பவுண்டுக்கு கடந்த 2018ஆம் ஆண்டு யுவன்டஸ் அணி அவரை வாங்கியது. தற்போதுவரை யுவென்டஸ் அணிக்காக விளையாடிவரும் ரொனால்டோ 75 போட்டிகளில் 53 கோல்கள் அடித்துள்ளார்.

உலகம் முழுவதும் தற்போது கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக கால்பந்து போட்டிகள் நடைபெறவில்லை. இதனால் அனைத்துக் கழகங்களும் ஏராளமான இழப்புகளை சந்தித்து வருகின்றன. இனிமேல் எப்போது கால்பந்து போட்டிகள் தொடங்கும் என்பது உறுதியாகத் தெரியவில்லை. கழகங்கள் மிகப் பெரிய அளவில் இழப்பைச் சந்தித்ததால் வீரர்கள் தங்களது சம்பளங்களை குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளனர். யுவென்டஸ் அணி ரொனால்டோவுக்கு ஒவ்வொரு சீசனுக்கும் 27.5 மில்லியன் பவுண்டுகளைச் சம்பளமாக வழங்குகின்றது. இப்படி முன்னணி வீரர்களுக்குக் கொடுக்க இருப்பதால் மிகப்பெரிய இழப்பை சந்திக்க நேரிடும் என யுவென்டஸ் நினைப்பதாக இத்தாலி செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. இதனால் ரியல் மட்ரிட் அணி விரும்பினால் 50 மில்லியன் பவுண்டுக்கு அவரை கைமாற்ற யுவன்டஸ் தயாராக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.04.2020இல் வெளியிடப்பெற்றது.